விலை: 60.00
பக்கங்கள் - 20

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

சங்குநாதம்

சங்கு 26
ஒலி 066 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 11 ஞாயிற்றுக்கிழமை (23.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
021 720 1005
இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= …

## கொழும்பில் தமிழ் வர்த்தகர் படுகொலை

# துப்பாக்கிதாரிகள் இருவரும்

# பொலிஸாரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் வர்த்தகர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரு துப்பாக்கிதாரிகளும் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)



## வேட்புமனுவின் பின்னரே

### தேர்தல் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

வேட்புமனு தாக்கல் முடிந்த 19ஆம் பக்கம் பார்க்க

## நவாலியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் 02ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாயில் விபத்து

### ஒருவர் பலி; ஐவர் படுகாயம்

### இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்கள் மீது வாகனம் மோதியதில் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இடம்பெற்ற மரணச்சடங்கின் இறுதி ஊர 19ஆம் பக்கம் பார்க்க

### கூட்டுப் பேச்சுவார்த்தை குறித்த தீர்மானம்

## தமிழரசுக் கட்சி மறுபரிசீலனை செய்ய வேண்டும் - கஜேந்திரகுமார்

(கொழும்பு)

கூட்டுப்பேச்சுவார்த்தை குறித்த தீர்மானத்தை இலங் கைத் தமிழரசுக் கட்சி மறுபரி சீலனை செய்ய வேண்டும் என 19ஆம் பக்கம் பார்க்க

KARAVAI CARE

உங்கள் பாசத்துக்குரியவர்களை அன்பாக பராமரிப்பதற்கு


கரவை நலவாழ்வு இல்லம்



எமது சேவைகள்
01. தனிப்பட்ட பராமரிப்பு
02. விசேட தேவையுடையோரிற்கான பராமரிப்பு
03. சிறிதளவு மனநல பாதிக்கப்பட்டவருக்கான பராமரிப்பு
04. தொழில்புரிவோருக்காக பகல்நேர பராமரிப்பு
05. மருத்துவ சேவைகள் 06. யோகா மற்றும் தியானம்

குறுகிய கால தங்குமிட வசதியும் உண்டு
(வெளிநாடுகளிருந்து கோவில் திருவிழா, கல்யாணம், விடுமுறைக்கு வருபவர்கள் தங்களது பெற்றோர்களை எமது இல்லத்தில் தங்கவைத்துவிட்டு தங்களது அலுவல்களை மேற்கொள்ளலாம்.)

மனோ | +44 7737 169030
ஜெகன் | +94 777 140090
whatsapp மூலமும் தொடர்புகொள்ளலாம்
Email-: karavaicare@gmail.com | mano8@tiscali.co.uk
கோவிற்கடவை பூந்தோட்டம், துன்னாலை மத்தி, கரவெட்டி.




ஏப்ரல் 1ம் திகதி முதல் அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்

Piccaso (025)

### வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து

## யாழில் பண மோசடியில் ஈடுபட்ட பெண் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் இருந்து வருபவர் களை இலக்கு வைத்து போலி மருத்துவ அறிக்கைகளை காண் பித்து பண மோசடியில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று முன்தினம் கோப்பாய் பொலி ஸாரினால் 19ஆம் பக்கம் பார்க்க

### வெடுக்குநாறிமலையில்

## சிவராத்திரியன்று மாலை 6 மணிவரையே பூஜை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரியன்று வெடுக்குநாறி மலையில் மாலை 6 மணிவரையே பூஜைகள் இடம்பெறும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணிவெடுக்குநாறிமலை யில் சிவராத்திரி தினம்தொடர்பாக ஆலய பூசாரியார் 19ஆம் பக்கம் பார்க்க

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிப்பில் கவனம்

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் ஒன்றைத் தயாரிப்பதில் அரசாங்கம் கவனம்செலுத்தியுள்ளது 19ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. வாங்க விரும்புவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(3490)

**070 767 8681**
**077 667 8680**

## 2 பரப்புக் காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைப் பகுதியில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. இரண்டு பக்கம் மதில், வாகனங்கள் சென்றுவர இடவசதி, குழாய்க் கிணறு, சிறிய மண்வீடு என்பன உண்டு.

பரப்பு 75 இலட்சம்
(பேசித்தீர்மானிக்கலாம்)

(3489)

**077 421 9060**

## வீடு வாடகைக்கு

NO-24, பலாலி வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் மட்டும் உண்டு. பெரிய வாகன தரிப்பிடம் இல்லை.

வாடகை முற்பணம் : 150,000/=
வாடகை : 20, 000/=

(3486)

தொடர்புகளுக்கு:
**077 236 5351**

## நவாலியில் ...

பிரிவுக்குட்பட்ட நவாலியில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நவாலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த 47 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் உறவினர்கள் இது குறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்திருந்தனர்.

இந்நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்றுமதில், பொளிகல்லு கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

(3493)

தொடர்பு : **076 026 8540**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

வவுனியா, வைரவபுளியன்குளம், கதிரேசு வீதியில் ஒரு பரப்புக் காணி 12 அடி பாதையுடன் 2 அறை வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

(3494)

தொடர்பு : **077 200 7836**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

(875)

தொடர்புகளுக்கு :
**075 498 5400, 077 937 0000**
**021 221 7600**

## Solar அனுமதி தேவை

சூரிய மின்சார இணைப்பில் (Solar Power) 100 kwக்கு மேற்பட்ட அனுமதிப் பத்திரத்தை வடபகுதியில் காணியுடன் விற்க ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(3485)

**077 082 1010**

## பெண் விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு புடவை வியாபாரம் அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் விற்பனையாளர் தேவை.

(3500)

**சிவகணேசன் TEX**
41,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

## பராமரிப்பாளர் தேவை

கரவெட்டிப் பகுதியில் வசிக்கும் வயதான தாயார் ஒருவரைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை

தொடர்புகளுக்கு:
**077 161 3060**

(C-2314)

## காணி விற்பனைக்கு (40 பரப்பு)

வசாவிளான் அச்சுவேலி வீதியில் சீர்திருத்தப் பாடசாலை மற்றும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு செல்லும் காப்பெற் வீதியில் கம்பி வேலியினால் சுற்றி அடைக்கப்பட்ட 3 அறை வீடு வெட்டுக் கிணற்றுடன் கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

(3495)

**075 696 6957**

## மணமகள் தேவை

யாழ், இந்து, கௌரவகுடும்பம், 1976 இல் பிறந்த, B.Sc பட்டதாரி அரச உத்தியோக திருமணமாகாத மணமகனுக்கு திருமணமாகாத நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

(3484)

**074 242 9737**

## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்) வருடாந்த பொதுக்கூட்டமும் வேட்புமனுத் தாக்குதலும்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

| | |
|---|---|
| காலம் | : 30.03.2025 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | : 10.00 மணி |
| இடம் | : ஆனந்த மண்டபம் - பழைய மாணவர் சங்க மற்றும் நம்பிக்கை நிதியக் கட்டடம் |
| தலைவர் | : திரு. விக்னேஸ்வரன் தயாபரன் |

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 03.03.2025 ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

தபால் முகவரி
செயலாளர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்

**2025/ 2026காலப் பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வேட்புமனுத் தாக்கல் செய்தல்**

- 2024/2025 க்கான நிர்வாக சபை தெரிவுக்காக கோரப்பட்ட வேட்புமனு இரத்துச் செய்யப்பட்டு புதிய வேட்பு மனு கோரப்படுகின்றது.
- சங்க அங்கத்தவர்கள் மாத்திரம் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.
- 2025/2026 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது சங்க அமைப்புத் திட்டவிதி உப பிரிவு 6.2 இன் பிரகாரம் நிர்வாக சபை தெரிவு தேர்தல் மூலம் நடைபெறவுள்ளதனால் சங்க அமைப்பு திட்டவிதி உப பிரிவு 61 இல் உள்ளவாறான பதவிகள் மற்றும் யாப்பு விதி உப பிரிவு 15.1இன் பதவி அனைத்திற்கும் போட்டியிட விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தாம் போட்டியிட விரும்பும் பதவிகளுக்கான வேட்பு மனுவை பாடசாலை அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 26.02.2025 ஆம் திகதி புதன்கிழமை முதல் பெற்றுக்கொண்டு 07.03.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு முன்னராக நேரடியாக பாடசாலையில் தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலரிடம் கையளிக்கப்பட வேண்டும்.
- தங்கள் வேட்பு மனுவை கையளித்தமைக்காக வழங்கப்படும் பொறுப்பேற்றல் கடிதத்தினை தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பு**

| | |
|---|---|
| காலம் | : 30.03.2025 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | : பி.ப 1.00 மணி முதல் மாலை பி.ப.4.00 மணி வரை |
| இடம் | : ஆனந்த மண்டபம் - பழைய மாணவர் சங்க மற்றும் நம்பிக்கை நிதியக் கட்டடம் |

கா.ச்சிகரன்
செயலாளர்
பழையமாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## ஆம் 31 நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 25.01.2025 சனிக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம்

**அமரர் சுந்தரலிங்கம் மகேஸ்வரி**



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.02.2025 நாளை திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 16.07.1941
மறைவு 25.01.2025

அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய். (874)

தகவல்: குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

(3497)

தொடர்புகளுக்கு :
**077 623 4204, 076 755 8606**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 15 அமைப்புகளுக்கு தடை!

## விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு உள்ளிட்ட 15 அமைப்புகளை தடை செய்யப் பட்ட அமைப்பாக அறிவித்து பாதுகாப்பு அமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்ய கொன்தாவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தொழிற்படுகின்ற தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குழுக்களிடமிருந்து பெறப்படுகின்ற உதவியுடன் அந்த அமைப்பை மீள் உருவாக்குவதற்கான எத்தனிப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்த குற்றச்சாட்டில் குறித்த அமைப்புகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலகத் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம் மற்றும் கனேடிய தமிழர் தேசிய அவை உள்ளிட்ட அமைப்புகள் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ் இளைஞர் அமைப்பு, எக்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பு, ஜமாதே மிலாதே இப்ராஹிம் அமைப்பு, விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் என்பனவும் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த வர்த்தமானி அறிவித்தலில் 222 தனிநபர்களின் பெயர் விபரங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. (நி-8)

## நீர் மின் உற்பத்தியில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் நீர். மின் உற்பத்தியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக இவ்வாறு நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 20 ஆம் திகதி நீர் மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தியானது தேசிய மின்சார தேவையில் 21 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மின்சாரசபையின் மொத்த மின் உற்பத்தியில் இவ்வாறு 21 வீதமாக குறைவடைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீழ்ச்சியடையும் மின்சார உற்பத்தியை ஈடு செய்வதற்கு எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியை அதிகரிக்க நேரிட்டுள்ளது.

இதன்படி கடந்த 20 ஆம் திகதி அனல் மின் மற்றும் டீசல் மூலமான மின் உற்பத்தியானது தேசிய மொத்த மின் தேவையின் 65 வீத அளவினை நிரம்பல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# அமைதியின்மையை ஏற்படுத்த திட்டமிட்டு செயற்படும் குழுக்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் இடம் பெற்ற கொலைகள், கடத்தல்கள் உட்பட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளை சீர்குலைத்து நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்த சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி. டபிள்யூ. ஆர். டி சௌவிரத்ன தெரிவித்தார்.

புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் அக்குழுக்கள் தொடர்பிலும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவற்றுக்கெதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள தகவல் ஊடக அமைச்சில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

## மீண்டும் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)


கொட்டாஞ்சேனை கல் பொத்த வீதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அண்மையிலும் இங்கு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 57 பாதாள உலகக்கும்பல்கள் நாட்டில் செயற்படுகின்றன

## பதில் பொலிஸ்மா அதிபர் தகவல்



(கொழும்பு)

நாட்டில் 57 பாதாள உலகக் கும்பல்கள் செயற்படுவதாகவும் அவற்றுக்கு சுமார் 1,400 பேர் உதவியாளர்களாக செயற்படுவதாகவும் புலனாய்வுத் தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தகவல் ஊடக அமைச்சில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை 2024 ஆம் ஆண்டு 75 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் 18 கத்திக்குத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாண்டு இதுவரையில் 17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், 5 கத்திக்குத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறையிலிருப்பதால் அதன் கீழ் சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் இல்லையெனவும் பதில் பொலிஸ்மா அதிபர் இந்த விசேட ஊடக சந்திப்பின் போது மேலும் தெரிவித்தார். (நி-8)

# நாட்டைப் பொறுப்பேற்க தயார் நாமல் பகிரங்கம்



(கொழும்பு)

எந்த நேரத்திலும் நாட்டை பொறுப்பேற்கத் தயாராக இருப்பதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் மூலம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவிற்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான விளம்பர நிகழ்ச்சி நேற்று பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.


இதன்போது கருத்துத் தெரிவித்த நாமல், ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்க அரசாங்கம் கலைக்கப்படும் எந்த நேரத்திலும் நாட்டை பொறுப்பேற்க தயாராக இருப்பதாக தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.பி.எல் தொடருக்கான

## ஜெர்சியை அறிமுகப்படுத்திய

# மும்பை இந்தியன்ஸ்



2025 இல் நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடருக்கான புதிய ஜெர்சியை மும்பை இந்தியன்ஸ் அணி அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

மொத்தம் பத்து அணிகள் பங்கேற்கும் ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இந்தமுறை அணிகளிடையே 74 போட்டிகள் 13 நகரங்களில் நடைபெற உள்ளது.

ஐ.பி.எல். தொடர் தொடங்க இன்னும் சில காலமே எஞ்சியுள்ள நிலையில், ஒவ்வொரு அணியும் அதற்கு தயாராகும் பணிகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளன.

அந்த வரிசையில் மும்பை இந்தியன்ஸ் அணி 2025 ஐ.பி.எல். தொடருக்கான ஜெர்சியை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.

நீலம் மற்றும் தங்க நிறங்களை கொண்டிருக்கும் புதிய ஜெர்சி அணிந்தபடி வீரர்கள் காட்சியளிக்கும் காணொளியை மும்பை இந்தியன்ஸ் அணி வெளியிட்டுள்ளது. (நி-8)

# சம்பியன்ஸ் டிராபி

## இந்தியா-பாகிஸ்தான் இன்று பலப்பரீட்சை

9 ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வருகிறது.

இந்த போட்டியில் விளையாடும் 8 அணிகளும் 2 பிரிவாக பிரிக்கப்பட்டு உள்ளன. ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஸ், பி பிரிவில் அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, ஆப்கானிஸ்தானும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் நாடுகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

இந்த போட்டி தொடரின் 5 ஆவது லீக் ஆட்டம் டுபாயில் இன்று நடக்கிறது. இதில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் பங்களாதேஸை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

அதே உத்வேகத்துடன் பாகிஸ்தானை தோற்கடித்து அரை இறுதிக்கு நுழையும் ஆர்வத்தில் உள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் மோதும் போட்டிக்கு எப்போதுமே அதிக எதிர்பார்ப்பு இருக்கும். அது மாதிரியே சம்பியன்ஸ் டிராபி போட்டியையும் ரசிகர்கள் எதிர் நோக்கியுள்ளனர். (நி-8)

## பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பாடசாலைகள் சங்கத்தின் செயலாளர் சுப்பிரமணியம் உதயணன் அறிவித்துள்ளார். (நி-8-90)

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 01 | | 19 |
| * | | * |
| 01 | | 02 |
| * | | * |
| 1936 | | 2025 |



**யாழ்.தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகர்**

**அமரர். செல்லையா பொன்னுசாமி**

**(S.P. சாமி)**

**அவர்களின் இழப்பினால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்

**வலம்புரி பத்திரிகை நிர்வாகம்**

ரூபாய் 46 கோடியை எடுத்துச் செல்ல

ரூ.40/- ஐ எடுத்து வாருங்கள்



உங்கள் அன்புக்குரியவருடன் வாங்குங்கள்.

கனவுகளற்ற எதிர்பார்ப்பு

Mega POWER

மெகா பவர்



(C-077)

லொத்தர்களை உங்கள் அருகில் கொண்டு வர அழையுங்கள் 0114607080 www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை - சுகாதார அமைச்சு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் நிலவி வரும் மருத்துவசேவை ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச மருத்துவமனைகளில் காணப்படும் மனிதவள தேவைகளை இனங்கண்டு அவற்றிற்கு உரிய தீர்வுகளைப் பெற்று தரும் நோக்குடன் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் விசேட கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஊர்காவற்றுறை பொது மருத்துவமனை வேலணை மாவட்ட மருத்துவமனை, வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி பொது வைத்திய சாலை மற்றும் மாங்குளம் பொது வைத்தியசாலை ஆகியவற்றில் மனித மற்றும் பௌதீக வளங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் யாழ். மக்களை பாதிக்கக் கூடிய தொற்றாநோய்கள் தொற்று நோய்களை கட்டுப்படுத்தல் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் வைத்தியசாலைக்கு அவசியமான மருந்துப் பொருட்கள் தொடர்பிலும் வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சுகாதார பணிப்பாளர், தீர்வு பெற்றுத்தரக் கூடிய சிக்கல்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு உரிய அதிகாரிகளுக்குப்பணிப்புரை விடுத்திருந்ததுடன் சுகாதார அமைச்சரிடம் தெரிவித்து ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் வழங்கப்படும் என பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (நி-8)

## குற்றவாளிகளை அடையாளம் காட்டினால்

# 10 இலட்சம் பணப்பரிசு

### பதில் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

**குற்றவாளிகள் மற்றும் துப்பாக்கிகள் குறித்து தகவலளிக்கும் பொதுமக்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கூறியுள்ளார்.**



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குற்றவாளிகள் தொடர்பில் 1997 என்ற இலக்கம் ஊடாக தகவல்களை வழங்க முடியும்.

ரி 56 ரக துப்பாக்கி குறித்த தகவல்களை வழங்கினால் 10 லட்சம் ரூபாய் வரை பணப் பரிசில் வழங்கப்படும்.

அத்துடன் தகவல் வழங்குபவர்களின் இரகசியம் பேணப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)


# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 25 . 12 . 1952

விண்ணில் 22 . 02 . 2025

எமது நண்பன் ரஞ்சனின் அன்புத்தாயார்

அமரர்.

## இந்திரகுமாரி சிவபாதசுந்தரம்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
நண்பர்கள் (சிட்னி-ஆஸ்திரேலியா)

(3490)


# இராசிபலன்

23.02.2025
மாசி 11, ஞாயிற்றுக்கிழமை
தசமி முற்பகல் 11.18 மணிவரை.

மூலம் பிற்பகல் 4.22 மணிவரை
சுபநேரம்-9.30-11.00 மணிவரை
இராகுகாலம் -5.00-6.30 மணிவரை

சந்திராஷ்டமம்.
ரோகினி, மிருகசீரிடம்

**வளவன்**

**மேஷம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வளர்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**ரிஷபம்**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**மிதுனம்**
பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கடகம்**
மறைமுக எதிர்ப்புகள் அகலும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**சிம்மம்**
பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர், உள்ளம் மகிழும் வகையில் சுப சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுறுசுறுப்போடு செயற்படும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், தனவரவு திருப்திதரும்.

**தனுசு**
காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**மகரம்**
பயணங்களால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களை நிறைவு செய்வதில் அதிக முயற்சி தேவை, சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**கும்பம்**
திடீர் பணவரவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிட்டும் வாய்ப்புண்டு.

**வெற்றியில் ஆணவம் கொண்டவன் தோல்வியை அருகே அழைக்கிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ்மொழி)க்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படிப் பதவிக்கு கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் திருமணமான, வயது 30-55 இற்கு இடைப்பட்டவர்கள் எதிர்வரும் 17.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகினால் வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்ற கலைக்குருசில் மற்றும் இளங்கலைஞர் விருதுகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே வடமராட்சி கிழக்கு பிரதேச கலைஞர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களினை மாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளங்களிலும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம் என மருதங்கேணி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி-8)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் கணபதிப்பிள்ளை நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் யுகராஜா ஜெபீஸன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-8)

### நியமத் துணை விதிகளை மீறினால்

# அழகுக் கலை நிலையங்களின் உரிமம் ரத்து செய்யப்படும்-ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நியமத்துணைவிதிகளின் சட்ட ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை மீறிச் செயற்படும் அழகுக் கலை நிலையங்களின் உரிமம் இரத்துச் செய்யப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஆளுநர் செயலகத்தில் அழகுக் கலைச் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஒரு சில அழகுக் கலை நிலையங்கள் சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்படுவது தொடர்பில் ஏற்கனவே ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அதற்கு அமைவாக இக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்றங்களால் உரிமம் வழங்கப்படும் போது உள்ளூராட்சிமன்ற அதிகார எல்லைக்குள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக் கலை நிலையங்களை நடத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகளின் அடிப்படையிலேயே ஒவ்வொரு ஆண்டும் உரிமம் வழங்கப்படுவதாக உள்ளூராட்சி அமைச்சின் செயலர் சுட்டிக்காட்டினார்.

இந்த நியமத்துணை விதியின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான தலைமுடி வெட்டுதல் கூட எவ்வாறு அமைய வேண்டும் என தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளதால் அதற்கு அமைவாகவே அனைத்து அழகுக் கலை நிலையங்களும் செயற்பட முடியும்.

நியமத் துணைவிதியை மீறும் அழகுக் கலை நிலையங்கள் தொடர்பில் அழகுக் கலைச் சங்கங்கள் அந்தந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கு முறைப்பாடு செய்ய முடியும் எனவும் குறிப்பிட்ட ஆளுநர், அதற்கு அமைவாக அத்தகைய அழகுக் கலை நிலையங்களின் உரிமத்தை உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்காலத்தில் இரத்துச் செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், தொழில் திணைக்களத்தின் பிரதிநிதிகள், சுகாதாரத் திணைக்களத்தின் பிரதி நிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-8)

## மகா சிவராத்திரி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

துன்னாலை அருள்மிகு வெல்லிக்கம் தோட்டப்பிள்ளையார் ஆலயத்தில் மகாசிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு வெல்லிக்கம் தோட்ட விநாயகர் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று நிறைவினைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். சிறப்பு சொற்பொழிவுகள் பட்டிமன்றம் மற்றும் சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-8)

## சோமநாதர் ஜோதிலிங்க தரிசனம்

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு சோமநாதர் ஜோதிலிங்க தரிசனம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணம் இல.11, பிறவுண் வீதியில் (கலட்டிச் சந்திக்கு அருகில்) அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் சுகதாம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

# மீண்டும் ஆரம்பமானது இலங்கை-இந்திய கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் துறைமுகம் இடையிலான இந்திய- இலங்கை பயணிகள் போக்குவரத்துக் கப்பல் சேவையானது நேற்றைய தினம் சனிக்கிழமை மீண்டும் ஆரம்பமானது.

நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த கப்பலானது நேற்று மதியம் காங்கேசன்துறையை வந்தடைந்தது. 83 பயணிகள் குறித்த கப்பலில் அங்கிருந்து வருகை தந்திருந்த நிலையில், பிற்பகல் 1.30 அளவில் காங்கேசன்துறையில் இருந்து நாகப்பட்டனத்திற்கு பயணத்தை ஆரம்பித்த கப்பலில் 83 பேர் பயணித்திருந்தனர்.

இந்தப் பயணிகள் போக்குவரத்துக் கப்பல் சேவையானது செவ்வாய்க் கிழமை தவிர்ந்து வாரத்தின் 6 நாட்களும் இடம்பெறும் என சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார். (நி-8-33)



# யாழ்.புகையிரத நிலையத்தில் தூய்மையாக்கல் பணி முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தைத் தூய்மையாக்கும் பணி நேற்றைய தினம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட சாரணர் இயக்கத்தின் பங்களிப்பில் குறித்த தூய்மையாக்கல் பணி இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பிரட்லி ஜெனட், யாழ் புகையிரத நிலைய பிரதம அதிபர் தேவராஜா சர்மா சுரேந்திரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வருணன், save the life நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உ.ராகுலன் மற்றும் சாரணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யாழ். புகையிரத நிலையத்தில் தூய்மையாக்கல் பணியை ஆரம்பித்த சாரணர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அங்கிருந்து புகையிரத நிலைய வீதியூடாக வைத்தியசாலை வீதிவரை நடைபவனியாக வந்தடைந்து வீதிகளில் உள்ள பிளாஸ்ரிக் கழிவுகளைச் சேகரித்தவாறு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தை வந்தடைந்தனர். (நி-8-33)




**மணமகன் தேவை**

1996, இந்து, பரணி, TEACHER
பூர்வீகம் -யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11471.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(நி-078)
www.EQMarriageService.com

**மணமகள் தேவை**

1996, இந்து, பூரட்டாதி, ACCOUNTANT
பூர்வீகம் - புங்குடுதீவு, வதியுமிடம் - U.K
மணமகன் பதிவு இல: 11177.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(நி-078)
www.EQMarriageService.com

**மணமகள் தேவை**

1991 ஆம் ஆண்டு, திருவோணம், முதலாம் பாதம் 7 செவ்வாய். கிரகபாவம் 71 3/4. சொந்த வியாபார நிறுவனம் வைத்திருக்கும் பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. இதில் மீனம் உத்தரட்டாதி, மீனம் ரேவதி, இடபம் மிருகசீரிடம் 1,2 ஆம், மகரம் அவிட்டம் 1, 2 ஆம், துலாம் சித்திரை, 7.8.2 இல் செவ்வாய் உள்ளவை பொருந்தக்கூடியவை.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 0760531753 (3488)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குற்றக்கூண்டில் குற்றவாளி சட்டத்தரணி வேடமணிந்த துப்பாக்கிதாரி நீதிமன்றில் நடந்தேறிய கொலை


அபிமன்யு

**2007**ஆம் ஆண்டு வெளி வந்த நடிகர் அஜித் குமாரின் ஆழ்வார் திரைப்படத்தில் வில்லனைக் கொல்வதற்காக புத்தகம் ஒன்றினுள் துப்பாக்கியை மறைத்து வைத்துக்கொண்டு போய் வில்லனைக் கொல்வார் நாயகன்.

குறித்த திரைப்படத்தைப் பார்க்கும் போது இது வெறும் திரைப்படக்காட்சி என நாம் நினைத்ததுண்டு.

அண்மைய கொழும்பு புறக்கோட்டை நீதிமன்ற துப்பாக்கிச்சூடு குறித்த திரைப்படக் காட்சியைப் மீண்டும் நினைவுபடுத்தியிருக்கிறது.

ஆம், பாதாள உலகக் குழுத்தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கடந்த 19ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை நீதிமன்றத்திற்கு குற்றவியல் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார்.



அழைத்துவரப்பட்டவர் நீதிமன்ற குற்றவியல் கூண்டில் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் சஞ்சீவ மீது துப்பாக்கிக்குண்டு பாய்கிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் சட்டத்தரணி போல வேடம் புனைந்தவர். அவர் சட்டப் புத்தகத்தினுள் துப்பாக்கியை மறைத்துக் கொண்டு வந்து சட்டத்தரணிகள் அமரும் இடத்தில் இருந்து தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்கிறார்.

சஞ்சீவ குற்றவியல் கூண்டில் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சட்டப் புத்தகத்தினுள் இருந்த துப்பாக்கியை எடுத்து சஞ்சீவ மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்துகிறார். சீறிப் பாய்ந்த குண்டு சஞ்சீவவின் நெஞ்சைத் துளைத்து விட சஞ்சீவ குற்றவியல் கூண்டில் சரிந்து விழுகிறார்.

அவரை மீட்ட பொலிஸார் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைகிறார்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பித்துச் சென்ற நிலையில், அன்றைய தினமே அவர் கைது செய்யப்பட்டார். இவர் ஓய்வுபெற்ற இராணுவ வீரர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரிக்கு துப்பாக்கியை வழங்கியவர் ஒரு இளம்பெண் என்பதும் அவரும் சட்டத்தரணி வேடம் புனைந்து நீதிமன்ற வளாகத்திற்குள் வந்துள்ளார் என்பதும் சி.சி.ரிவி ஆதாரங்கள் மூலம் வெளியாகியுள்ளது. இவரும் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக நாட்டில் (தெற்கில்) துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்கள் அதிகரித்துள்ள நிலையில், அரசாங்கம் சூட்டுச் சம்பவங்களுக்கு முடிவு கட்டவேண்டும். இல்லையேல் அது அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இல்லாமல் செய்துவிடும்.

பாதாள உலகக்குழுத் தலைவர் சஞ்சீவ பல்வேறு குற்றங்களுடன் தொடர்புபட்டவர். அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை சரியானது என்று வாதிடுபவர்களும் உளர். ஆயினும் கொலை நடந்த இடம் நீதிமன்றம்.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் கோவிலாகப் போற்றப்படும் நீதிமன்றத்துக்குள் கொலை நடக்கிறது ஏனின் அது அந்நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றே பொருள்.

பாதாள உலகக் குழுத்தலைவர் சஞ்சீவ பல்வேறு கொலைக்குற்றங்களுக்காக தேடப்படும் ஒருவர். அவர் கடல் வழியாக இந்தியாவிற்கு தப்பிச்சென்று, அங்கிருந்து நேபாளத்திற்குச் சென்று, நேபாளத்திலிருந்து கடந்த 2023ஆம் ஆண்டு 13ஆம் திகதி நாட்டிற்கு வந்திருந்த நிலையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

குறித்த கொலை தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையில் இக்கொலையுடன் நேரடித் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் சிறைச்சாலையில் சஞ்சீவவிடம் இருந்து செய்மதித் தொலைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இது உண்மையெனின் குற்றவாளிகளை இனங்காண இது உதவியாக இருக்கும்.

ஊழல் ஒழிப்பை பிரதான குறிக்கோளாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்தும் செயலே இதுவென ஆளும் கட்சியினர், அரசியல் ஆய்வாளர்கள் கூறும் நிலையில், பாதாள உலகக் குழுவிற்கு தேசிய மக்கள் சக்தி அரசு முடிவு கட்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றில் பாதுகாப்பு அமைச்சுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக பாதாள உலகக் குழு செயற்படுகின்றது. நாட்டில் போதைவஸ்து விதைப்புக்கு மிக முக்கிய பங்காற்றுகின்றது பாதாள உலகக்குழு.

அத்துடன் கொலை, கொள்ளை, கப்பம் கோரல் என பல சட்டவிரோத செயற்பாடுகளிலும் பாதாள உலகக் குழுவினர் ஈடுபட்டு வருவதால், அவர்களை ஒடுக்கினால் மாத்திரமே நாடு மீட்சி பெறும்.

நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அரசியலாக்கி அதில் ஆதாயம் தேடும் செயற்பாடுகளும் நடந்து கொண்டு இருக்கின்றன.

ஆம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று நீதித்துறை எனப் போற்றப்படுகிறது. இந்நிலையில் நீதி வழங்கும் நீதிமன்ற வளாகத்தில், நீதிமன்ற நடவடிக்கையின் போது, சட்டக் கூண்டில் ஒரு கொலை நடக்கிறது எனின் அது ஒருநாளும் அறமாகாது.

தேசிய மக்கள் சக்தி அரசு குற்றவாளிகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தி தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்.

இதுவே தேசிய மக்கள் சக்தியை நம்பி வாக்களித்த மக்களுக்கு அரசாங்கம் செய்யும் கைமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

பிரபல தொழில் அதிபரும் நோதேர்ன் சென்றல் நேசிங் ஹோம் மற்றும் தினக்குரல் பத்திரிகை ஆகியவற்றின் ஸ்தாபகருமாகிய எஸ்.பி.சாமி அவர்கள் காலமானார்.



எஸ்.பி.சாமி

அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி, இப்ப இலங்கையில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருக்குது என்ன சங்கதி.


**விதானையார்:-** முன்னைய ஆட்சியாளர்கள் வளர்த்துவிட்ட பாதாள உலகக் கோஷ்டியை பலமிழக்கச் செய்யிறதாக இருந்தால், வேற என்ன தான் செய்ய முடியும்.

தென்பகுதியில, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடக்குது தான். ஆனால் துப்பாக்கியால சுட்டுக் கொல்லப்படுகிறவர்களைப் பார்க்கும் போது அவர்கள் ஏதோவொரு வகையில கொலை, போதைவஸ்து வியாபாரம் என்பவற்றுடன் தொடர்புபட்டவர்களாக இருப்பதைக் காணமுடியும்.

**மூப்பர்:-** எங்கட வடக்கு- கிழக்கு தமிழர் பகுதியிலும் போதைவஸ்தை முற்றாக ஒழித்துக் கட்ட வேணும். இல்லை எண்டால் நிலைமை மோசமாகத் தான் இருக்கும்.

**கங்காணி:-** மூப்பர் சொல்லுறது உண்மை தான். இரவு வேளையில எங்கட பெடியளும் சில இடங்களில ஒன்று கூடி நிற்கினம்.

உண்மையில இப்படியான சூழ்நிலை தான் போதைவஸ்து பயன்பாட்டிற்கு வழிவகுக்குது. ஆகையால தங்கட பிள்ளைகள் மாலைப் பொழுதில வீட்டிற்கு வருவதை பெற்றோர் உறுதி செய்ய வேணும்.



## அம்புலன்ஸ் வண்டி வரும் போது விலகிக் கொடுக்காதவரைப் பாரீர்

**சாத்திரியார்:-** ஏன் மூப்பர் இரவில கூடி நின்று பொழுது போக்குகிற பிள்ளைகளுக்குப் பெற்றார் சொன்னால் கேட்பினமோ.

இப்ப இருக்கிற சூழ்நிலையில பெற்றார் பிள்ளைகளுக்கு அடங்கி வாழுகிற நிலையல்லோ ஏற்பட்டிருக்குது.

**சிறாப்பர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். இப்ப எங்கட யாழ்ப்பாணத்தில முழத்துக்கு முழம் சாப்பாட்டுக் கடைகள் தானே திறக்கப்படுகுது.

அதிலும் உலகளவில பேசப்படுகின்ற உணவகங்கள் அத்தனையும் யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டன.

அதிலும் சில உணவகங்களுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற வாகனங்களைப் பார்த்தால், திருமண நிகழ்வு நடக்குதோ எண்டு நினைக்கிற அளவுக்கு நிலைமை உள்ளது. அந்தளவில உணவகங்களில சனம் குவிந்து நிற்குது.

**விதானையார்:-** என்ன செய்யிறது. எங்களில ஒரு தரப்பிட்ட காசு குவிஞ்சு கிடக்குது. அப்ப வீடுகளில சமைக்காமல் பிரபலமான உணவகங்களில போய்ச் சாப்பிடுறது கௌரவம் எண்டு நினைக்கினம்.

அதேநேரம் ஏழைக் குடும்பங்கள் ஒருநேர உணவுக்கே அல்லாடுகினம். என்ன செய்யிறது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறம் இல்லாமல் போயிற்றுது.

**மூப்பர்:-** விதானையார் சொல்லுறதை நானும் ஆமோதிக்கிறன். உலகளவில் பேசப்படுகின்ற உணவகங்களில போய்ச் சாப்பிடுறது ஒரு பசனாய்ப் போயிற்றுது.

ஆனால் அந்த உணவுகள் எங்கட உடல் நலத்திற்கு எந்தளவு தூரம் ஆரோக்கியமானவை என்பதைப்பற்றி ஆரு சிந்திக்கினம்.

**சாத்திரியார்:-** சாப்பாட்டில மட்டுமல்ல இப்ப சனங்கள் எதிலுமே கவனமில்லை. எப்ப பார்த்தாலும் கையடக்கத் தொலைபேசிக்குள்ள முகத்தைப் புதைத்துக் கொண்டு தாங்கள் வாழ்கிற புறச் சூழலைப் பற்றி இம்மியும் கவனம் இல்லாமல் இருக்கினம்.

**சிறாப்பர்:-** உண்மை தான். இந்தாப் பாருங்க. எங்கட தென்னை மரங்களை வெள்ளை ஈ அழித்துக் கொண்டிருக்குது. இருந்தும் வெள்ளை ஈத் தொற்றில இருந்து எங்கட தென்னை மரங்களைக் காப்பாற்ற வேணும் எண்டு ஆரும் நினைக்கினமோ.

அண்மையில தென்னைப் பயிர்ச் செய்கைச் சபைத் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது, வட மாகாணத்தில வெள்ளை ஈத் தொற்றால தென்னை மரங்கள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதை எங்கட ஆளுநர் வேதநாயகன் அவருக்கு எடுத்துக் கூறினவர்.

ஆனால் இதுவரை வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துகிற எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

**பண்டிதர்:-** தெரியாமல் தான் கேட்கிறன். வட பகுதியில தென்னை மரங்களில் வேகமாகப் பரவி வரும் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு படையினரின்ற உதவியை பெற்றால் என்ன?

**சிறாப்பர்:-** பண்டிதர் ஐயா சொல்லுறதில நியாயம் இருக்கத்தான் செய்யுது.

எங்கட தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில இயந்திரங்களும் கருவிகளும் இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்குப் போதிய ஆளணி இல்லை எண்டு வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில நடந்த கூட்டத்தில தெரிவிக்கப்பட்டது.

எனவே காலதாமதமின்றி வடபகுதியில உள்ள படைத்தரப்போட கதைத்து, வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துகின்ற விசேட திட்டமொன்றை உடனடியாகத் தயாரித்து அதை அமுலாக்க வேணும்.

இல்லையெண்டால் எங்கட தென்னை வளத்தை இழந்து தலையில் கை வைக்கிற கதிதான் ஏற்படும்.

**வாத்தியார்:-** இப்ப எங்கட இளம் சமூகம் கையடக்கத் தொலைபேசிக்குள்ள மூழ்கிக் கிடக்கிறதால எல்லாம் சீரழிந்து போகுது.

எந்த நிகழ்வுகளுக்குப் போனாலும் அங்கயும் போய் கையடக்கத் தொலைபேசியில ஏதோ பார்த்துக் கொண்டு தான் இருக்கினம்.

**கங்காணி:-** வாத்தியார் நீங்கள் இதைச் சொல்லுறியள். ஆனால் நீங்கள் அவதானித்தால் தெரியும் நோயாளர் காவு வண்டி (அம்புலன்ஸ்) சைரன் ஒலியை எழுப்பிக் கொண்டு வந்தாலும் எங்கட சனம் விலகிக் கொடுக்கிறதாக இல்லை.

ஒரு உயிரைக் காப்பாற்றுகிற முயற்சிக்குக் கூட நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனும் போது, எங்கட மனநிலை எப்படியாயிற்று எண்டும் பாருங்களன்.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வர்மக்கலை பற்றிக் கூற முடியுமா வியாசரே?**

*வியாசகன்*
*யாழ்ப்பாணம்*

வர்மக் கலை என்பது உடலின் முக்கிய நாடி, நரம்பு புள்ளிகளைப் பற்றிக் கூறுகின்றது.

தமிழர்களுக்கே உரித்தான வர்மக் கலை அகத்திய மாமுனியால் உருவாக்கப்பட்டது.

படுவர்மம், தொடுவர்மம், தட்டு வர்மம், நோக்கு வர்மம் என வர்மக்கலையை அகத்தியர் நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்.

தலைப்பகுதியில் 37 புள்ளிகளும் நெஞ்சுப் பகுதியில் 13 புள்ளிகளும் உடலின் முன் பகுதியில் 15 புள்ளிகளும் முதுகுப் பகுதியில் 10 புள்ளிகளும் கைகளின் முன்பகுதியில் 9, பின்பகுதியில் 8 புள்ளிகளும் கால்களின் முன்பகுதியில் 19, பின் பகுதியில் 13 புள்ளிகளும் கீழ் முதுகுப் பகுதியில் 8 புள்ளிகளுமாக மொத்தம் 132 புள்ளிகளுக்குள் உலகையே ஆச்சரியத்தில் வியக்கும் வகையில் மேற்கொண்டிருக்கிறார் அகத்தியர்.

நாம் தமிழன் என்று பெருமிதம் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணம்.

**பூக்களில் எந்தப் பூ சிறந்தது என்று கூற முடியுமா வியாசரே?**

*தவராஜன்*
*கொற்றாவத்தை*

இந்தக் கேள்விக்கு நான் சிரிப்பு என்று பதில் தருவேன் என்று நீங்கள் நினைப்பீர்களானால் அது தவறு.

பூக்களில் சிறந்த பூ கற்பு. ஆம், கற்புநெறி என்பது பெண்களுக்கு மட்டும் எனும் தவறான புரிதல் எம் சமூகத்தினரிடம் தொற்றிக் கொண்டு விட்டது.

ஆண், சேறுகண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிவிடுவான். அவன் ஆண் என்கிறார்கள்.

கற்பு நெறி என்பது மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானது. கற்புநெறி ஒன்றினால் மாத்திரமே மனிதன் மிருகங்களில் இருந்து வேறுபட்டு நிற்கிறான் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.





**வரவு-செலவுத்திட்டம் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கிறதா வியாசரே?**

*ஜெயக்குமார்*
*முகமாலை*

கடந்த கால அரசுகளுடன் ஒப்பிடும் போது அநுர அரசின் வரவு-செலவுத்திட்டம் ஓரளவுக்குத் திருப்தி தரக்கூடியதாக இருக்கிறது.

இதில் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கும் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்திற்கும் விசேட நிதி ஒதுக்கியமை வடக்கு தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் செயலே.

இதில் விசேடம் என்னவெனில் யாழ்.நூலக எரிப்பின் வடுக்கள் இன்றுவரை தமிழ் மக்களிடம் இருந்து வருவதாக ஜனாதிபதி கூறியமையே.

ஆம், எமது பொக்கிஷத்தை எரித்துவிட்டார்களே என்று தினம் தினம் தமிழினம் மனதால் புழுங்கிக் கொண்டிருப்பதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது.



**பொருட்களின் விலை கடைக்குக் கடை வித்தியாசப்படுகிறதே ஏன் வியாசரே?**

*செல்வக்குணச்சந்திரன்*
*பருத்தித்துறை*

பொருட்களைப் பதுக்கி வைத்து, அதற்கு போலித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதைச் சாதகமாகப் பயன்படுதி கொள்ளை அடிக்கும் வர்த்தகர்களுள், நல்ல, நேர்மையான, நியாயமான, கண்ணியமான வர்த்தகர்களும் உள். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் இல்லை.

மக்கள் வயிற்றில் அடித்து கோடீஸ்வரராகினாலும் அவர்களின் கடைசிக் கால வாழ்க்கை மிகவும் கொடூரமானதாயே அமையும்.

அது எப்படியெனின், வீட்டில் அரிசி மூடை மூடையாய் இருக்கும். ஆனால் ஒரு வாய் சோறு தொண்டையினால் இறங்காது. இந்தக் கொடுமையை அனுபவிக்க விரும்பினால் பொருட்களுக்கு தாறுமாறு விலை சொல்வார்கள்.

**புலம்பெயர் இலங்கையரை, இலங்கைக்கு வரச் சொல்கிறதே அரசாங்கம்?**

*சுதன்*
*குப்பிழான்*

வரவேற்பதற்கு நாங்கள் தயார். வருவதற்கு அவர்கள் தயாரா என்பதுதானே கேள்வி.

என்ன செய்வது. எங்கள் நாடு அப்படியான நிலையில் இருக்கிறதே. எங்கள் நாடு மனிதர்கள் வாழும் வகையில் இருந்தால், சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்றவர்கள் இங்கு வராமல் அங்கேயே நிற்பதற்கு காரணம் தேட மாட்டார்களே.

இங்கே நேரம் பார்த்து வேலை செய்தவர்கள் அங்கே மாடாய் உழைத்து, டொலருக்கு இலங்கைப் பெறுமதி பார்க்கின்றமைதான் கொடுமையிலும் கொடுமை.


**ஆலய பூசகரும் அதிக சம்பளமும், இது பற்றிய கருத்து ஏதும் உண்டா வியாசரே?**

*கஜிபன்*
*கோண்டாவில்*

இது விடயத்தில் நாம் கண்ணியத்துடன் நடக்க வேண்டும். ஒரு கோவிலுக்கு பூசகரை நியமித்தால் அவர் காலை, மாலை வர வேண்டி இருக்கும். பிரசாதம் தயார் செய்ய வேண்டி இருக்கும். போக்குவரத்து, நேர விரயம் என்பவற்றைக் கணக்கிட்டு நாம் அவருக்கு கொடுக்கும் ஊதியம் சரியாக இருக்கிறதா என்று கணக்கிட்டு பார்க்க வேண்டும்.

ஓர் இருவர் அதிக சம்பளம் கேட்கிறார்கள் என்பதற்காக ஒட்டு மொத்தமாய் பூசகர்களை இழிவுபடுத்தக்கூடாது.

எமக்கு ஆயிரம் தொழில் இருக்கும் ஆனால் அவர்களின் ஒரே தொழில் ஓதுதலே.



**வியாசர் அவர்களே உங்களை முட்டாள் என்றோ? புத்திசாலி என்றோ கூறுபவர்களுக்கு உங்கள் பதில் என்ன?**

*இந்து*
*மானிப்பாய்*

இருவருக்கும் ஒரே பதில் தான். உங்களை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்களோ அவ்வாறே என்னையும் கருதிக்கொள்ளுங்கள். அவ்வளவுதான்.

**வியாசரே ஏமாற்றுபவர்களா? ஏமாறுபவர்களா நாட்டில் அதிகம்?**

*தாரு*
*வதிரி*

ஒரு அரசியல்வாதி தேர்தலில் போட்டியிட்டு இலட்சக்கணக்கில் ஓட்டுக்கள் வாங்குகிறார் எனின், இந்த நாட்டில் ஏமாற்றுபவர்களை விட ஏமாறுபவர்களே அதிகம் என்ற முடிவுக்கு நாம் வந்துவிடலாமல்லவா?

**அம்மாச்சி உணவகங்களில் கோதுமை மா அதிகம் பயன்படுத்தப்படுகிறதே வியாசரே?**

*தாரகன்*
*சங்கானை*


சிறுதானிய உணவு வகைகளை ஊக்குவிக்கவும் உண்ணவும் நாங்கள் தயார் என்றால் பிறகேன் அவர்கள் கோதுமையில் நிற்கிறார்கள்.

அம்மாச்சி உணவகத்தில் குரக்கன் பிட்டிற்கும் ஒடியல் கூழிற்கும் இலைக் கஞ்சிக்கும் வரகு அரிசிச் சாதத்திற்கும் வரிசையில் நிற்கும் நிலை இல்லையே.

வெறும் தோசைக்கும் இட்லிக்கும் வரிசையில் நிற்க வேண்டி இருக்கிறதே. முதலில் எங்கள் மனங்களை மாற்றிக் கொள்வோம் அதுவே பெரு மாற்றத்திற்கான முதல் படி.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு**
**SMS, Whats App செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

45

அவர் தொழிலற்ற ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவுமிருந்தார். 23 பெப்ரவரி, 1973 ஆம் திகதி பொலிஸ் சார்யன்ட் பேரம்பலத்தினால் கைது செய்யப்பட்டு கோட்டை ராணி மாளிசைக்கு விசாரனைக்காகக் கொண்டுவரப்பட்டார்.

அங்கு வைத்து ஏ.எஸ்.பி. பி டபிள்யூ த சில்வாவினால் விசாரிக்கப்பட்டார். நீண்ட காலத்தின் பின்னர் ராணி மாளிகையில் அவல ஒலம் ஒலிக்கத் தொடங்கியது சத்தியசீலன் ஆரம்ப விசாரனையின் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சத்தியசீலனின் வாக்குமூலத்தின் விளைவாக ஏறத்தாழ நாற்பது இளைஞர்கள் தொடர்ந்து கைதாகினர்.

கொண்டலடி வைரவர் கோவில் மடைப்பள்ளியில் கூடி, வரவேற்புக் கூட்டமொன்றில் கலந்துகொள்ள விருந்த அமைச்சர் குமார சூரியர் மீது கைக்குண்டு வீசுவதற்காகச் சதியாலோசனை செய்தமைக்காகவும் கைக்குண்டு தயாரித்தமைக்காகவும் இளைஞர் சிலர் கைது செய்யப்பட்டு கோட்டையின் பங்களாவிற்குக் கொண்டுவரப்பட்டனர்.

மாவை சேனாதிராசா, சோதிலிங்கம், மதியாபரணம், சிவராஜா, ராஜகுலசூரியர், குவேந்திரராஜா ஆகிய இளைஞர்கள் கைதாகி விசாரனைக்குட்படுத்தப்பட்டனர். வரலாற்றுக் காலத்திலிருந்து சித்திரவதைக்குப் புகழ் பெற்ற கோட்டையின் மேல் பங்களாவில் இந்த இளைஞர்கள் ஏ.எஸ்.பி. சில்வா. இன்ஸ் பெக்டர் பஸ்தியாம் பிள்ளை, பொலிஸ் சார்ஜன்ட் பேரம்பலம், சப் இன்ஸ்பெக்டர் விக்கினேஸ்வரராஜா முதலானோ ரால் விசாரிக்கப்பட்டனர்.

முறிகண்டியிலுள்ள உயர் அழுத்த மின்கோபுரத்தைச் சரித்து விழுத்துவதன் மூலம் 22, மே, 1972 ஆம் ஆண்டு துக்க தினத்தை யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதையும் இருளில் மூழ்கடித்துக் கொண்டாடச் சதி செய்தமைக்காக இன்னொரு கூட்ட இளைஞர்கள் கைதாகினர்.

ஆனந்த விநாயகம், அமரசிங்கம், ஜெயம், சுப்பிரமணியம் (மணியம்). இராசலிங்கம் ஆகிய ஐவரும் கைதாகி, குயின் ஹவுசில் வைத்து இன்ஸ் பெக்டர் பஸ்தியாம் பிள்ளையால் தனித் தனியாக விசாரிக்கப்பட்டனர்.

அரசாங்க ஆதரவாளர்களாக இருந்தவர்களின் வீடுகளுக்குக் கைக்குண்டு வீசினார்கள் என்பதற்காகச் சூரிய குமாரன். பெரிய தம்பி. கனகரத்தினம், நித்தியானந்தன், கிருபைநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். நல்லூர் கிராமசபைத் தலைவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தமைக்காக சி. தனபால சிங்கம், சி.சபாரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

(தொடரும்...)

---

# கடல் புறா

பல விநாடிகள் அத்தகைய முணு முணுப்புடனும் தீவிர சிந்தனையுடனும் திருப்பத் திரும்ப அந்த அறையில் அங்குமிங்குமாக நடந்த இளையபல்லவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல் அறையின் நடுவே நின்று இருமுறை தன் தலையை அசைத்துக் கொண்டதன்றி உறுதி நிரம்பிய கண்களை அமீரின் முகத்தின் மீதும் புரட்டி, "அமீர்! இப்பொழுது புரிகிறதல்லவா இந்தக் கோட்டையின் நிலவரம் உனக்கு?" என்று வினவினான்.

அதுவரை அமீரின் முகத்திலிருந்த திகைப்பும் வியப்பும் மறைந்து அவை இருந்த இடத்தைக் குழப்பம் ஆக்கிரமித்துக் கொள்ளவே. இந்தக் கோட்டையின் நிலவரத்தைப் பற்றி இதில் ஏதுமில்லையே! என்றான் குழப்பம் குரலிலும் தொனிக்க "நேர்முகமாக பார்த்தாயல்லவா!" என்று வின வினான்.

"ஆமாம், பார்த்தேன்." என்றான் அமீர் மேலும் குழப்பம் அதிகரிக்க.

"அந்த உபதளபதி பலவர்மனால் இந்த அக்ஷயமுனையில் கொல்லப்பட்டிருக்கிறான்" என்று சுட்டிக்காட்டி அர்த்தபுஷ்டியுடன் அமீரைப் பார்த்தான் இளைய பல்லவன்.

"ஆமாம் பட்டத்தின் கீழுள்ள குறிப்பு அதை மறைமுகமாக உணர்த்துகிறது." என்றான் அமீர்.

"ஆம், ஆம் விசித்திரமாயிருக்கிறது?" என்றான் அமீர் "அது மட்டுமல்ல, கொள்ளையரையும் கடற்கரையில் வைத்து ஆதரிக்கிறான் ஒரு நாகரிக சாம்ராஜ்யத்தின் துறைமுகத் தலைவன் ஒருவன். அதைப்பற்றியும் கேள்வி கேட்பதில்லை சாம்ராஜ்யாதிபதி" என்று குறிப்பிட்டான் இளையபல்லவன்.

"கேட்பதாகத் தெரியவில்லை" என்றான் அமீர். "ஏன்? ஏன் கேட்கவில்லை?" என்று திடீரெனக் கேள்வியை வீசினான் இளைய பல்லவன். அவன் குரல் மிக உஷ்ணத்துடன் ஒலித்தது.

"அதுதான் புரியவில்லை." என்றான் அமீர். "எனக்குப் புரிகிறது நன்றாகப் புரிகிறது. சாம்ராஜ்யாதிபதியான ஜெயவர்மன் பலவர்மனை எதுவும் கேட்க முடியாது. கேட்கும் நிலையில் இல்லை. அதை இந்த ஓலை தெளிவாக்குகிறது என்று இருமுறை ஓலையைத் தன்கையால் தட்டியும் வலியுறுத்திச் சொன்னான் இளையபல்லவன்.

அமீரின் கூரிய புத்தியையும் ஏமாற்றிய அந்த ஓலை அப்பொழுதுதான் அமீரின் புத்தியிலும் உண்மையை மெல்ல மெல்ல வீசத்




காலத்தின் பதிவு 140

தொடங்கவே அமீரின் முகத்தில் பெரும் பிரமிப்பு விரிந்தது. "சரி, சரி, அதுதான் பலவர்மன் இங்கு தனியரசு செலுத்துகிறானா!" என்றும் கேட்டான் அமீர் பிரமிப்பு பூர்ண மாகத் தொனித்த குரலில்.

"ஆம் அமீர் சுயநலத்தையும் சுயபலத்தையும் தவிரவேறெதையும் வாழ்க்கையில் அறியாத வஞ்சகனான பலவர்மன், ஸ்ரீவிஜய சக்கரவர்த்தியின் பெரும் ரகசியமொன்றைக் கையில் வைத்துக்கொண்டு அவனை அதைக் கொண்டே மிரட்டி அக்ஷயமுனைப் பக்கம் கால் வைக்காமல் அடித்திருக்கிறான். இந்த ஓலை என்றும் அவனுக்கு விஜய வர்மனிடமிருந்து பாதுகாப்பை அளிக்கும்" என்றான் இளையபல்லவன்.

ஊதல், ஊதல்,ஊதல்
ஊதினால் சாதல், சாதல், சாதல்!

இல்லை அமீர்.

ஆனால் இதில் கண்ட இரகசியத்தைப் பலவர்மன் செய்கைகளுடன் இணைத்துப் பார். இந்நாட்டு மன்னனின் போக்குடன் இணைத்துப் பார்" என்று கூறிய இளையபல்லவன் அமீரை மீண்டும் கூர்ந்து நோக்கி, "அமீர் ஸ்ரீ விஜயத்தின் உபதளபதியின் படமொன்றை நீ பலவர்மன் அறையில்

இளையபல்லவன் விழிகள் பெரிதும் பளிச்சிட்டன. "ஒரு பெரும் சாம்ராஜ்யத்தின் உபதளபதி கொல்லப்படுகிறான். அதைப்பற்றிச் சாம்ராஜ்யாதிபதி கவலைப்படாதிருக்கிறான்.

கொன்றவன் ஒரு கோட் டையின் தலைவன். இஷ்டப்படி சுதந்திரமாக உலாவுகின்றான். இது விசித்திரமாயில்லையா?" என்று கேட்டான் இளையபல்லவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானகங்கள்



| | | |
|---|---|---|
| படம் | : | நீர்க்குமிழி |
| பாடியவர் | : | சீர்காழி கோவிந்தராஜன் |
| இசை | : | வி.குமார் |
| இயற்றியவர் | : | "உவமைக் கவிஞர்" சுரதா |

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா
கண் மூடினால் காலில்லா கட்டிலடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை
தொகுப்பார் சிலரதை சுவைப்பதில்லை
தொடங்குவார் சிலரதை முடிப்பதில்லை
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

## அன்பு வாசகர்களே!

காலத்தால் அழியாத கானம் பகுதியில்
உங்களுக்குப் பிடித்த பழைய பாடல்களை
பெயர், முகவரியுடன் வாட்சப் செய்தால்
உங்கள் விருப்பப்பாடல் உங்கள் பெயருடன்
வெளிவரும்.

076 097 3126

# ஆச்சி அறிவுரை



## மாட்டு வண்டிச்சவாரி

### பேராண்டி...

"வேப்ப மர உச்சியில் நின்று பேயொன்று ஆடுதெண்டு விளையாட்டாய் போகும் போது சொல்லி வைப்பாங்க உந்தன் வீரத்தை கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க"

இது "சின்னப்பயலே சின்னப்பயலே செய்திகேளடா..." எண்டுர பாட்டிலை வார வரி. அட இதையேன் இப்ப சொல்லுறன் எண்டு பாக்கிறியா? நீ குழந்தையா இருக்கும் போது உன்ர தாத்தா உன்னைத் தூக்கி வைச்சு இந்தப் பாட்டைத்தான் படிப்பார்.

அதைக்கேட்டுக் கொண்டே நீ நித்திரை கொண்டுடுவாய். நீ நித்திரை கொள்ளாமல் இருந்தா கொம்மா உன்னை தாத்தாட்ட கொடுப்பா. தாத்தா இந்தப் பாட்டைப் பாட நீ நித்திரை கொண்டுடுவாய்.

பேராண்டி! தாத்தா துணிந்த மனிசன், பலசாலி, நேர்மையானவர். அதுபோலதான் நீ வளர வேண்டும் எண்டு அடிக்கடி சொல்லுறவர். அண்டைக்கு வீட்டுக்குள்ள ஒரு பாம்பு வர, நீ பயப்பிடாமல் அதை ஒரு போத்தலுக்குள்ள பிடிச்சுக் கொண்டுபோய் வயல்காட்டில விட்டுட்டு வந்தனி எண்டு கொப்பா சொன்னவன்.

அதைக்கேட்க எனக்கு உன்ர தாத்தா சொன்னா வசனங்களும் பாட்டும் தான் நினைவுக்கு வந்தது. அதுக்குப்பிறகு மனது ஒரு மாதிரி இருந்தது பேராண்டி. சரி அதைவிடு, கடந்து போறதுதானே வாழ்க்கை.

மாட்டுவண்டிச்சவாரிப் போட்டி பற்றி கேள்விப்பட்டிருக்கிறியோ? அந்தக் காலத்தில மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி மிகப்பிரபல்யமான விளையாட்டு.

போட்டிக்கு மாடுகளைத் தயார் பண்ணுற வேலை மிகக் கஸ்டமானது. சோடி மாடுகளைத் தெரிவு செய்து. மாடுகளை மாட்டு வண்டியில பூட்டி மெல்ல மெல்ல ஓடப் பழக்க வேணும். போட்டியில ஓடுறதெண்டா சும்மா ஓடுறதில்லை. மாடுகள் பயங்கர வேகமாக ஓடவேணும். போட்டி தொடங்குறதுக்கு ஒரு வாரத்துக்கு முன்னமே ஊர் திருவிழாக்கோலம் பூண்டிடும். அந்தக் காலத்தில சவாரித்திடல்கள் கனக்க இருந்தது. இப்ப அதுகளை படைமுகாம்கள் ஆக்கிரமிச்சிட்டுது. அதுவேற கதை.


சவாரிப் போட்டி என்றால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களில இருந்து போட்டியில பங்குபற்ற ஆக்கள் வருவினம். லொறியில மாடு, வண்டில் எல்லாத்தையும் ஏத்திக்கொண்டு தான் வருவினம். சவாரித்திடல்ல மாடுகள் ஓடுற பாதையையும் பார்வையாளர் இடத்தையும் பிரிச்சு கயிறு கட்டி எல்லையிடப்பட்டிருக்கும்.

மாடுகளுக்கு சாராயம் பருக்கிறதாகவும் வேகமாக ஓடவேணும் எண்டு, கருங்காலித் தடியில ஆணி இறுக்கி மாடுகளின்ர முதுகிலை குத்துறதாகவும் ஒரு கதை இருக்கு. ஆனா உன்ர தாத்தா அந்தக் கொடுமையான வேலையை ஒருநாளும் செய்யிறதில்ல. மாட்டை வேகமாக் கலைக்க; மாட்டின்ர வாலைப் பிடிச்சு முறுக்குவார், அவ்வளவுதான், மாடு சீறிப்பாயும். மாடுகள் ஓடேக்க வண்டில் அச்சு முறியும். துலா உடையும், மாடுகள் குறுக்கை இழுக்கும். அதுகள் பயங்கரமான சேதத்தையும் காயங்களையும் ஏற்படுத்தும். ஏன் உயிர் போற நிலைகூட இருக்கும். வீட்டின்ர சின்னறைக்குள்ள இருக்கிற சிலாப்பில உன்ர தாத்தா சவாரி போட்டியில வாங்கின பரிசுகள் இப்பவும் இருக்குது பார்.

அதிலையும் சொனி றேடியோ, எனக்காக எண்டு சொல்லி, சவாரியில ஓடி, முதலாவதா வந்து அதை வாங்கி என்ர கையில தந்தவர் தாத்தா. மாட்டு வண்டிச்சவாரி எண்டுறது எங்கட பாரம்பரிய விளையாட்டு. அதில வீரம் நிறைஞ்சிருக்கு. அதோட ஒழுக்கம் நூறுவீதம் இருக்கும்.

இப்ப ஆங்காங்கே சவாரிப்போட்டிகள் நடந்தாலும் அது அழிஞ்சு வாற நிலையிலேயே இருக்குது. அப்பாவைக் கேட்டு, சவாரிப்போட்டி எங்கையாவது நடந்தால் ஒருக்கா போய்ப்பார் பேராண்டி.

**ஆச்சி வருவா...**



மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி காணும்



மனித வாழ்வில் இனிமை காண
மமதை விலக வேண்டும் - உன்
அறிவு சேர்ந்து அன்பை ஈட்டும்
மனதை சேர்க்க வேண்டும்

இனிமை காண எளிமை வேண்டும்
தனிமை அமைய வேண்டும் - மனம்
அமைதி பேணி ஆர்பரிப்பை விடுத்து
ஏகாந்தமான எளிமை சேரும்

அமைதி காணும் நிலையை நாடி
என்றும் இன்பங் காண்பாய் - உள்ளம்
இனிமை கண்டு முதுமை காண எண்ணில்
மனதில் அமைதி பொங்கி எழும்.

இன்பம் என்பது எளிமை உணர்வு
துன்பம் உள்ளத்தில் உதிக்க வேணும்
அன்பு கொண்டு வாழ்பவர்க்கு - மனம்
இன்பம் கண்டு அமைதி பேணும்

பாசத்தோடு வளரும் நேசம் புவியில்
கோசம் போட்டு குரலைக் காட்டும் - வாழ்வு
தேசமெங்கும் சிந்தை ஊறும்
இனிமை பொங்கி அமைதி காணும்.

**வளவை வளவன்**

# உலகினை ஆளும் காகிதம்



உறவுகள் மறந்து உணர்வுகள் இழந்த
உலகின் காகித ஆட்சி ஏனோ?

வெற்றுக்காகிதம் கொடுக்கும் இன்பம் எல்லாம்
தேய்பிறை நிலவின் தேகம் போன்றது

ஆறடி நிலத்தில் அடங்கிடும் மனிதா
அறிந்த உனக்கு ஏன் இந்த ஆணவம்

காகிதம் சேகரிக்கும் முயற்சியில் உலகம்
ஓடுது தினமும் இயந்திர வாழ்வில்

போலிகள் நிறைந்த உறவின் வேடமும்
நன்றி மறந்த நாடக அரங்கும்

அனைத்தும் இணைந்து அழித்திடும் உலகினை
அன்று புரிவாய் காகிதத்தின் குணத்தினை

அச்சிட்ட காகிதம் அழித்திடும் மனிதத்தை
தெளிந்திரு மனிதா எம் இனம் காக்க

அன்பினைக் கொண்டு நிறைத்திடு உலகினை
மனிதம் கொண்ட உலகினை காத்திட.

**ந.விதுசன் - கற்கோவளம்**

# நீ என்பது



என் உயிரின் ரகசியம்
பூவுக்குள் உயிர் பெற்ற
என் பிரபஞ்ச அதிசயம்..

உன் காதல் என்பது
வேர் உறிஞ்சும் நீராய்
உடலெங்கும் ஊறி
ஒரு பூவின் பிறப்பாய்
வாசனையைத் தருவது..

பெயரிடப்படாத அந்தப்
பூவின் வாசனை
என்னைச் சுற்றியே
அத்தராய் அணைப்பது..

உன் ஸ்பரிசங்களில்
உதிரும் மகரந்தங்கள்
மரகத மலர்த் தோட்டமாய்
வாழ்வை அழகாக்குவது..

ஒரு நாள்
உன்னிடம் நானும்
என்னிடம் நீயுமென
முழுதாக இடம்பெயர்ந்து
கிடக்குமொரு பொழுதில்..

ஒரு பட்டாம்பூச்சியாய்
கிளர்ந்தெழும் இந்தப் பிரியம்
சுரக்கும் அன்பெனும் அமுதத்தால்
உடலெங்கும் நீலம் பரிக்க...
சென்று கொண்டிருந்தேன்
மோட்சத்தை நோக்கி..

தன்னியல்பை இழந்த
காதல்
நமக்குள் கலந்து
நம்மியல்பு கொள்வதே
உயிரின் ரகசியமென
பிரபஞ்சம் அதிசயிக்கின்றது..

**சாங்கரி சிவகணேசன்**

# உன் உள் இருப்பவன்

தங்கத்தமிழ் படித்து தரமாகத்தான் உரைத்து
தஞ்சைவாழ் நாயகனின் தாழ்பணிந்து பேசுகிறேன்
நான்... நான்தான் உன் உள்ளிருப்பவன்


அண்டமெல்லாம் உலாவி ஆராய்ந்து பார்த்தாயாயின்
நெஞ்சத்து ஆழம் முதல் நெடுவானச் சிகரம் வரை
கண்டிருப்பாய் நானிருப்பேன் கருவிலும் நானிருப்பேன்

ஆ... என் செய்தேன் என்கிறாயா? கேட்கிறது உன்குரல்
அன்பில்லை என்றழுதாய் தனிமை இன்பம் காட்டித்தந்தேன்
கோபத்தில் நீ உளன்றாய் வாய் பேசக் கற்றுத்தந்தேன்

வெற்றிபெற வேண்டும் என்றாய் வெறியெண்ணம் புகுத்தி விட்டேன்
பொறாமையால் வாழ நின்றாய் கொலை நீ செய் என்றேன்
நான் சொன்ன பாதையினில் அழகாய் தான் பயணித்தாய்

சமூகத்தின் போதனையால் இன்று எனை அகற்றிப் பார்க்கிறாய்
நான் தானே நீ இன்று, நான் இன்று நீயேது
நானில்லா பொழுதினிலே உன் வாழ்வோ பாலைக்கூத்து

ம்... நான் யாரென்று தெரிகிறதா? உன் உள்நெஞ்சைக் கேட்டாயா?
தீப்போல பரவிவிட்டேன் எனை அணைக்க நினைக்கிறாயா?
நான், இருள்... தீய எண்ணம் சூழ், உன்னுள் அரசாளும் இருள்.



**ஜே.புராதனி,**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி.**


# அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்கு நாதத்தில் நீங்களும்
எழுதலாம்....

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி,
தொலைபேசி இலக்கம் என்பவற்றை
குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுனிதா வில்லியம்ஸின்

# விண்வெளி வானவாசம்





"250 நாட்களுக்கும் மேலாக நீண்டுள்ளது, விண்வெளி வீரர் சுனிதா வில்லியம்ஸின் வானவாசம்."

● ஜூனியர் விகடன்

பெப்ரவரியில் பூமிக்குத் திரும்பியிருக்க வேண்டிய விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் இணையின் வரவு பல காரணங்களால் தள்ளிப்போய் கொண்டே இருக்கிறது. எட்டு நாட்களுக்குள் முடிவதாகத் தொடங்கிய இந்த விண்வெளிப் பயணம், எட்டு மாதங்களையும், சாதனைகளோடு பின்னப்பட்ட அசௌகரியங்களையும் தாண்டி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில், அவர்கள் மார்ச்சில் பூமிக்குத் திரும்பு வார்கள் என தற்போது தெரிவித்துள்ளது நாசா.

**24 மணி நேரத்தில்... விண்ணில்!**

கடந்த ஆண்டு ஜூன் 5இல் பூமியில் இருந்து போயிங் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட ஸ்டார் லைனர் விண்கலத்தின் மூலம் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா மற்றும் வில்மோர், சர்வதேச விண்வெளி நிலையம் எனப்படும் ஐ.எஸ்.எஸ் (ISS - International Space Station), எட்டினர். இது ஒரு சோதனை ஓட்டம். ஸ்டார்லைனர் விண்கலத்தை விண்வெளி வீரர்களை விண்வெளி நிலையத்திற்கு அழைத்துச் செல்லவும், திரும்பிக்கூட்டி வரவும் பயன்படுத்தலாமா என்று இந்த இணையைக் கொண்டு வெள்ளோட்டம் பார்த்தது நாசா "Crew Flight Test" என்று இதற்கு பெயரிடப்பட்டிருந்தது. ஏறக்குறைய 24 மணிநேரத்தில் சுனிதா மற்றும் வில்மோருடன் சர்வதேச விண்வெளி நிலையத்தோடு தன்னை இணைத்துக் கொண்டது ஸ்டார் லைனர் விண்கலம்.

சில ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட பிறகு, கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்குப் பின் அதே ஸ்டார்லைனர் விண்கலத்தில் அந்த இணை பூமிக்குத் திரும்புவதாகத் திட்டம். ஆனால், ஹீலியம் வாயு கசிவு, த்ரஸ்டர் (Thrusters) செயலிழப்பு உள்ளிட்ட தொழில்நுட்பக் கோளாறுகளால் அதனை நடை முறைப்படுத்த நாசா தயங்கியது. அந்த விண்கலத்தில் பூமிக்குத் திரும்புவது இந்த இணையின் உயிருக்கேகூட ஆபத்தாகலாம் என்பதால், ஒருகட்டத்தில் அவர்கள் இல்லாமலே ஸ்டார்லைனர் விண்கலத்தை மட்டும் பூமியை நோக்கித் திருப்புவதாக முடிவெடுத்தது நாசா.



**சுனிதா சிக்கிக் கொள்ளவில்லை!**

ஸ்டார்லைனர் ஒருவழியாகத் தானாகவே இயங்கி, 6 மணி நேரப் பயணத்துக்குப் பின் கடந்த செப்டெம்பரில் பூமிக்கு வந்து சேர்ந்தது. இதனை, ஏதோ விண்வெளி நிலையத்தில் சுனிதாவும் வில்மோரும் சிக்கிக் கொண்டதாக சராசரி மக்கள் கருதினாலும், நாசாவைப் பொறுத்தவரை, ஆய்வுகளை அவர்கள் விண்வெளியில் மேலும் சில மாதங்கள் தொடர்வதற்கான ஒரு வாய்ப்பே இது. நாசா மட்டுமல்ல, சுனிதா மற்றும் வில்மோர் இருவரும்கூட பலமுறை இக்கருத்தையே வீடியோ கோலில் செய்தியாளர்களுடனான சந்திப்பில் உறுதிப்படுத்தி இருந்தனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தை விட்டு, Crew 9 அசிரத்தையாகக் கிளம்பிவிட முடியாது. அவர்கள் செய்த ஆய்வுகள் குறித்த முக்கிய முடிவுகளை, அதுகுறித்த தரவுகளை அடுத்த வரவுள்ள Crew 10இன் வசம் ஒப்படைத்து விட்டுத்தான் விடைபெற முடியும். ஷிஃப்ட் மாற்றம் போல. எனவே, Crew 10 சர்வதேச விண்வெளி நிலையத்தை எட்டாமல் Crew 9 ஆல் பூமிக்குத் திரும்பமுடியாது.

"சரி, Crew 10 ஐ அனுப்ப வேண்டியது தானே?" என்கிறீர்களா? Crew 10 அனுப்பப்படுவதில் சற்றே சுணக்கமும் காலதாமதமும் ஏற்பட்டிருக்கிறது. காரணம், அதனை மேம்படுத்தப்பட்டதாக, குறைகளற்றதாக அனுப்ப வேண்டும் என்ற நாசாவின் குறிக்கோள். அதன் விளைவாக Crew 9இன் பயணத்திட்டம், அதில் பிரயாணப்பட்டு சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் பூமிக்குத் திரும்புவது என எல்லாமே தாமதமாகியது. இதனால்தான் பெப்ரவரியில் வந்திருக்க வேண்டியவர்கள் மார்ச் இறுதி அல்லது ஏப்ரல் தொடக்கம் வரை அங்கேயே தங்கவேண்டிய நிலை உண்டாகியுள்ளதாகச் சொல்லப்பட்டது.

**ஜீரோ கிராவிட்டி, தசையிழப்பு... என்ன ஆச்சு சுனிதாவுக்கு?**

இதில் பலரையும் கவலை கொள்ளச் செய்வது, சுனிதாவின் உடல்நிலை. சமீபத்தில் வெளியான புகைப்படங்களில் சுனிதா மிகவும் மெலிந்து காணப்படுகிறார். அவருக்கு தசையிழப்பு ஏற்பட்டிருக்கலாமோ என்ற அச்சம் நிலவுகிறது. பொதுவாக, விண்வெளியில் ஜீரோ கிராவிட்டியில் தங்கும் காலம் நீள நீள, பாதிப்புகளும் தாக்கங்களும் அதிகமாகும். தசை மற்றும் எலும்புகள் வலுவிழக்கும், உள் உறுப்புகள் பாதிப்படையும், நோய் எதிர்ப்புச்சக்தி குன்றும், பார்வைக்குறைபாடு ஏற்படும். மனதளவிலான பாதிப்புகள் கூட ஏற்பட வாய்ப்புகளுண்டு.

250 நாட்களைக் கடந்தும் சுனிதா விண்வெளியில் இருப்பதால் இந்த பாதிப்புகள் அவருக்கு ஏற்பட்டிருக்குமோ என்று கவலை மக்களைச் சூழ்ந்தது. போதாக்குறைக்கு, "நடப்பது எப்படி என்பதே எனக்கு மறந்துவிட்டது. வீட்டுக்கு வர, பூமியில் கிடைக்கும் உணவுகளைச் சாப்பிட ஏங்குகிறேன். இங்கே பீட்சா தான்" என சுனிதா இயல்பாகக் கூற, பலராலும் அவர் பரிதாபமாகப் பார்க்கப்பட்டார். ஆனால், நாசாவோ இதையெல்லாம் மறுத்து இதற்கான முறையான விளக்கமும் கொடுத்தது.

பொதுவாக, விண்வெளியில் மாதக் கணக்கில் தங்கவேண்டிய சூழல் ஏற்பட்டால் உடலில் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து தப்பிக்க உடற்பயிற்சி அவசியம். சுனிதா வில்லியம்ஸ் விடயத்தில் அவர் உடற்பயிற்சிகளை மேற்கொண்டதால்தான் மெலிந்திருக்கிறார் என்று கூறியிருந்தது நாசா.

**சாதனை மேல் சாதனை!**

இப்படியான சூழலில் உடலளவில் ஒருவர் சந்திக்கும் சவால்களை விட மனதளவிலும் உணர்வின் அடிப்படையிலும் அனுபவிப்பவைதான் அதிகம். என்றாலும், விண்வெளியில் 250 நாட்கள் தாண்டி தங்கியிருப்பது விண்வெளி வீரர்களுக்கு புதிதானதல்ல. சொல்லப்போனால், ஒட்டுமொத்தமாக தனது மூன்று விண்வெளிப் பயணத்திலும் சேர்த்து சுனிதா 500 நாட்களைக் கடந்திருக்கிறார் என்றால், 90களில் ஒரே பயணத்தில் 437 நாட்களை ரஷ்ய வீரர் வலேரி பால்யகோவ் விண்வெளியில் கழித்திருக்கிறார். ஆனால், அது திட்டத்தின் படி நடந்தது. சுனிதா விடயத்திலோ எதிர்பாராமல் தள்ளிப்போகிறது. வழக்கப்படி பார்த்தால் அது அவரை மனதளவில் பாதித்திருக்க வேண்டும். ஆனால், அவரோ அதற்கு மாறாக மனத்திண்மையோடு தெளிவாகக் காணப்படுகிறார்.



● சுனிதா வில்லியம்ஸ்

ஒட்டுமொத்தமாக தனது மூன்று பயணங்களில் 500 நாட்களை விண்வெளியில் கடந்தது என்ற மைல்கல்லை கடந்த நவம்பரில் எட்டினார் சுனிதா. சமீபத்திலோ, 9ஆவது முறையாக விண்வெளியில் ஸ்பேஸ்வாக் செய்து சாதனை நிகழ்த்தியுள்ளார். இதன்மூலம், பெக்கி விட்சனின் ஸ்பேஸ் வாக் சாதனையை முறியடித்திருக்கிறார்.

**16 சூரிய உதயங்கள், மீதம் கதைகள் விரைவில்!**

தன் குடும்பத்துடன் தொடர்ச்சியாக வீடியோ கோலில் பேசிக்கொண்டிருக்கும் சுனிதா, ஐ.எஸ்.எஸ் பூமியை 90 நிமிடங்களுக்கு ஒருமுறை சுற்றி வருவதால் கடந்த புத்தாண்டு தினத்தன்று 16 சூரிய உதயங்களைப் பார்த்து இரசித்தார். அவர் பூமிக்குத் திரும்பும்போது பல சாதனைகளும், அவரின் இன்னும் பல வானவாச கதைகளும் நம்மை வந்து சேரும்!

ஆக, மார்ச் மாதத்தின் மத்தியிலேயே சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் பூமியை எட்ட உள்ளனர் என்ற மகிழ்ச்சிக்குரிய தகவலை நாசா உறுதி செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

438

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஜம்பு மரத்தின் வரலாறு

எளிமையும் எண்ணற்ற சத்துக்களையும் கொண்டது ஜம்பு. இது ஓர் முதல் இலை வரை பயன்படக்கூடியதும் மருத்துவக் குணங்களைக் கொண்டதும், கோடை கால தாகத்தையும் பசியையும் தீர்க்கும் அருமருந்தும் ஆகும்.

ஜம்பு மரத்தின் வரலாறு முதலில் ஜம்பு மரத்தின் பெயர்கள் பற்றி பார்ப்போம். தமிழிலே "ஜம்பு" என்றழைப்பது போல் ஆங்கிலத்தில் இதனை றோஸ் அப்பிள் (Rose apple), பெல் பழம் (Bell fruit), றோயல் அப்பிள் ( Royal apple) வாக்ஸ் பழம் (Wax furit) என்றழைப்பார்கள். அதிலும் தாய்வான் நாட்டைச் சேர்ந்தவர்கள் கருஞ்சிவப்பு நிறமான ஜம்புப் பழத்தை (Black pearl) அதாவது கறுப்பு முத்து என்று அழைப்பார்கள்.


இதனுடைய தாவரவியல் விஞ்ஞானப் பெயர் Syzygium samarangense ஆகும்.

ஜம்பு மரம் இந்தியா, இந்தோனேஷியா நாடுகளினதும், அந்தமான், நிக்கோபார், மலேயா தீவுகளின் கடற்கரையோடும் காடுகளினதும் சுதேசமரமாகும்.

அதன்பிறகு, வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே பிலிப்பைன்ஸ் தீவுகளில் அறிமுகப் என்பதை அறிய முடிகிறது.

விஸ்ணு புராணத்தில் இந்தப் பிரபஞ்சம், 7 தீவு கண்டங்களாகவும் அதனைச்சூழவுள்ள 7 சமுத்திரங்களாகவும் பிரிக்கப்பட்டது. ஒரு கண்டத்தில் ஜம்பு மரங்கள் செறிந்து காணப்பட்டதால் ஜம்புத் தீவு அதாவது ஜம்பு மரங்கள் செறிந்து காணப்பட்டதால் ஜம்புத் தீவு அதாவது ஜம்பு மரங்களின் நாடு என்று அழைக்கப்பட்டது என்று விஸ்ணு புராணத்தில் கூறப்படுகின்றது.

எம் எல்லோருக்கும் தெரிந்த அயல் நாடான இந்தியாவே முன்பு



களை உண்டார் 'எனவும் இராமாயணக் கதை கூறுகின்றது.

இந்த ஜம்பு மரம் பெரிய மரக் கொப்புகளைக் கொண்டதும், பெரிய நிழல் தரக்கூடிய குளிர்ச்சியான மரம் என்பதால் பல ஞானிகள், யோகிகள் இந்த மரத்தின் கீழே அமர்ந்து தியானம் செய்தார்கள் என பல கதைகள் உண்டு.

பழம் உணவாகப் பயன்படுகின்றது. நீர்த்தன்மை கூடிய பழம், உடலின் குளிர்மையைப் பேணுகிறது. பழத்தில் பழச்சாறு செய்து பருகலாம். ஒரு சலரோக நோயாளி

வெளியேறும் வெல்லத்தின் அளவைக் குறைப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

ஜம்புப்பழம் மறைமுகமாக மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறைக் குறைப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஜம்புப் பழச்சாறு மூளை, ஈரல்களுக்கு நன்மையளிப்பதாகவும், ஜம்புப் பூவிலிருந்து பெறப்படும் சாறு காய்ச்சலைக் குறைப்பதாகவும், இலைகளிலிருந்து பெறப்படும் சாறு இருமல், மூட்டு வாதத்துக்கு பயன்படுவதாயும் சிறுநீரின் அளவை அதிகரிக்கும் (Diur etic) தன்மையைக் கொண்டிருப்பதாயும் ஆய்வுகள் கூறுகின்றன.

ஜம்புப்பழ விதைகளில் உணர் வழியில் தன்மை இருப்பதாகவும், வேரில் வலிப்பு நோயைக் குறைக்கும் தன்மை காணப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. மருத்துவம் தவிர விதைகள் நீக்கப்பட்ட பழத்திலிருந்து பன்னீர் இலைச் சாற்றிலிருந்து வாசனைத் திரவியம் (perfume) மற்றும் மரத்திலிருந்து வயலின், கிற்றார், போன்ற இசைக் கருவிகளும் உருவாக்கப்படுகின்றன.

**நடுவது எப்படி?**

படுத்தப்பட்டுள்ளது. அதன்பிறகு இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அசோகச் சக்கரவர்த்தியின் மகன் "மகிந்த" என்ற மன்னன் ஜம்பு மரத்தை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து இலங்கை மன்னன் தேவநம்பிய தீசனிடம் கொடுத்ததாக மகாவம்ச வரலாறு கூறுகிறது.

ஜம்புமரம் உயர் வெப்ப மண்டலத்தின் தாழ் நிலங்களில் மிகச் சிறப்பாக வளரக்கூடியது. இலங்கையின் கால நிலையைப் பொறுத்தவரையில் இது மிகவும் சிறப்பாக வளரக்கூடியது.

அதுவும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் ஜம்பு மரம் கனிகளைத் தரக்கூடிய காலமாகும்.

ஒரு மரத்தில் இருந்து 700 வரையான கனிகளைப் பெற முடியும். ஒருமரம் 15 அடி முதல் 50 அடிவரையும் வளரக் கூடியது.

முன்னைய காலங்களில் ஜம்பு பழங்களை உண்டுபார்த்தபின் இப்போது இந்த ஜம்பு மரத்துக்கும் எமது இந்து புராணக் கதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு ஜம்புத்தீவு என்றழைக்கப்பட்டது. விஸ்ணு புராணத்தின் இன்னுமொரு பகுதியில் இந்த ஜம்பு பழங்கள் மிகவும் பெரியன அதாவது யானையளவு பெரியன எனவும் மலையொன்றின் உச்சியிலே காணப்பட்ட ஜம்பு மரங்களில் இருந்து கீழே விழுந்து வெளிப்பட்ட பழச்சாறுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நதியாக ஓடியது எனவும் அதுவே ஜம்பு நதி எனவும் கூறப்படுகின்றது.

அதைவிட இன்று இந்தியாவின் திருச்சிராப்பள்ளியின் அருகிலுள்ள ஸ்ரீரங்கத்தில் ஜம்புகேஸ்வர கோயிலின் ஸ்தல புராணத்தில் இன்றும் கோயிலில் காணப்படுகின்ற ஜம்பு மரத்தின் கீழுள்ள சிவலிங்கம் பற்றி ஒரு கதை இருக்கின்றது. சிவபெருமான் ஒரு நாள் மரமொன்றின் கீழ் இருந்து தியானம் செய்து கொண்டிருக்கும் பொழுது அருகில் உள்ள மரமொன்றிலிருந்து பழம் ஒன்று இவர் அருகில் விழுந்தது. சிவபெருமான் அந்தப் பழத்தை எடுத்து உண்டுவிட்டு அதனுடைய வித்தை வெளியே துப்பினார். அந்த வித்திலிருந்து முளைத்த மரமே ஜம்பு மரமாகவும் சிவபெருமானே சிவலிங்கமாகவும் அவ்விடத்தில் இன்றும் வழிபடப்படுகின்றது.

இராமாயணத்தில் இராமர் 14 ஆண்டு கால வனவாசத்தின் போது காட்டிலுள்ள இந்த ஜம்பு பழங்

யைப் பார்த்து ஒரு துண்டு மாம்பழம் உண்ணுங்கள் என்போம்.

ஒரு துண்டு சுவைத்தவரால் மீதியை விட்டு வைக்க மனம் வராது. இவ்வாறு உண்டு சலரோகம் கட்டுப்பாடு இழந்து வைத்தியசாலையே வாசம் என இருப்போர் மத்தியில் ஜம்புப் பழத்தின் அறிமுகமானது ஒரு கொடை. இந்தப்பழத்தை விரும்பிய அளவு உண்ணலாம் கெடுதல் இல்லை.

ஜம்புப்பழம் இலை, பூ, விதைகள், வேர், பட்டை என்பவற்றில் மருத்துவத் தன்மைகள் இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. சில ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.ஜம்புப்பழம் விற்றமின் "சி" கூடிய உணவாகவும், நார்த்தன்மை கூடிய உணவாகவும் காணப்படுகின்றது. நார்த்தன்மை காரணமாக உடலின் கொழுப்புத் தன்மை அதாவது Cholesterol குறைவடைவதாக ஆய்வுகளிலிருந்து அறியப்படுகின்றது.

சதையின் தொழிற்பாடு குறைவடைவதால் ஏற்படும் சல ரோக நோயாளிகளில் மாச்சத்து வெல்லமாக மாறுவதைக் கட்டுப்படுத்துகிறது.

ஜம்புப்பழ வித்தில் Jumbo line என்ற இரசாயனப் பதார்த்தம் காணப்படுகின்றது. இது சலத்தில்

கீழ்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு நடவேண்டும்.

2 x 2 x 2 அடி நீளம், அகலம், ஆழம் கொண்ட குழி வெட்டவும். மரக்கன்றுகளை இயற்கை உரம் கொண்டு மூடவும்.

முதற்கிழமை ஒவ்வொருநாளும் நீர் ஊற்றவும்.

இரண்டாவது கிழமை இரண்டு நாள்களுக்கு ஒரு முறை நீர் ஊற்றவும்.

மூன்றாவது கிழமை மூன்று நாள்களுக்கு ஒரு முறை நீரூற்றவும்.

மூன்று மாதங்கள் கடந்த பின் கீழ்பகுதியில் உள்ள பக்க கிளைகளை கத்தரித்து விடுவதன் மூலம் நேராக வளர்க்க முடியும்.

சிறிய நிலப்பரப்புகள் உள்ள வீடுகளிலும் வளர்க்க முடியும். வருடத்துக்கு இரு தடவைகள் பழங்களைத் தரக்கூடியது. வலை கொண்டு மரத்தை மூடுவதன் மூலமும், பைகள் கொண்டு பழங்களை மறைப்பதன் மூலமும் பறவைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் உருவெடுத்துள்ள மற்றுமொரு வைரஸ்!

## ஆய்வில் தகவல்

(பீஜிங்)

**சீனாவில் புதிய வகை வெளவால் கொரோனா வைரஸ் என்ற வைரஸை சீனக் குழு ஒன்று கண்டுபிடித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

கொரோனா போன்றே இந்த புதிய வைரஸும் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவும் அபாயம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நச்சுயிரியல் வல்லுநரான ஷி ஷெங்லி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் புதிய வகை வைரஸ் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய வகை கொரோனா வைரஸ் ஹெச்.கே.யு.5 (HKU5) என அழைக்கப்படுகின்ற நிலையில், இந்த வைரஸ் ஜப்பானைச் சேர்ந்த பிபிஸ்ட்ரெல் வகை வெளவால்களில் காணப்பட்டது.

இந்த வைரஸும் மனிதர்களின் சுவாச மண்டலத்தை பாதிக்கும் தன்மை கொண்டுள்ளதாகவும் இதுவும் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும் ACE 2, அதாவது முந்தைய சார்ஸ்-கோவி-2 வைரஸ் போன்ற பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



"வெளவால் ACE 2 மட்டுமின்றி மனித ACE 2 மற்றும் வெவ்வேறு இனங்களின் மரபணுக்களைப் பாதிக்கும் ACE 2 வகையை சேர்ந்த HKU5-CoV-ஐ கண்டுபிடித்திருப்பதை அறிவிக்கிறோம் என சீனக் குழு இதழ் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்தவைரஸைவெளவால்களில் இருந்து தனிமைப்படுத்தினால், அவை மனிதர்களிடத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வைரஸ் மனிதர்களுக்கு சுவாசம் மற்றும் குடல் உறுப்புகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் தன்மை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


கொரோனா வைரஸ் தொற்று உருவானது எப்படி என்பது தொடர்பாக உறுதியான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

எனினும், சீன ஆய்வகத்தில் இருந்து தான் இந்த வைரஸ் பரவியதாக உலகளவில் நம்பப்படுவதுடன் இது தவிர கொரோனா வைரஸ் வெளவால்களில் இருந்து தான் மனிதர்களுக்கு பரவியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆய்வகத்தில் இருந்து வைரஸ் பரவியதாக வெளியான தகவல்களை ஷி ஷெங்லி திட்டவட்டமாக மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இந்தோனேசிய ஜனாதிபதியின் மாளிகையை முற்றுகையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்

(ஜகர்த்தா)



இந்தோனேசிய ஜனாதிபதி பிரபாவோ சுபியாந்தோவின் சிக்கன நடவடிக்கையைக் கண்டித்து, அவரது மாளிகையை முற்றுகையிட்டு நூற்றுக் கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பதற்றம் நிலவியது.

ஆசிய நாடான இந்தோனேஷியாவின் ஜனாதிபதியாக, முன்னாள் இராணுவ அதிகாரி பிரபாவோ சுபியாந்தோ கடந்த ஒக்டோபரில் பொறுப்பேற்றார். பதவியேற்றது முதலே பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வந்த அவர், நாட்டில் நிலவும் நிதி பற்றாக் குறையை சமாளிக்க சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ள கடந்த மாதம் உத்தரவிட்டார்.

குறிப்பாக, பள்ளி குழந்தைகளுக்கான இலவச உணவுத் திட்டத்துக்கு நிதியை மாற்றிவிடும் நோக்கில், சிக்கன நடவடிக்கை தொடர்பாக பல்வேறு உத்தரவுகளைப் பிரபாவோ பிறப்பித்தார்.

அரசு ஊழியர்கள் பணிநேரங்களுக்கு முன்பாகவே செல்ல அறிவுறுத்தப்பட்டனர். காஸ் சிலிண்டர்களுக்கு வழங்கப்பட்ட மானியம் நிறுத்தப்பட்டது. இதுபோன்ற பல்வேறு அதிரடி மாற்றங்களால் இந்தோனேஷியாவில் மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஜனாதிபதிக்கு எதிராக திரண்ட போராட்டக்காரர்கள் நாடு முழுதும் பல்வேறு இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று முன்தினம் திரண்ட போராட்டக் காரர்கள் அவருக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர். இருண்ட இந்தோனேஷியா என்பதை குறிக்கும் வகையில் கறுப்பு உடை அணிந்து, கையில் தீப்பந்தங்களுடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஜகார்த்தாவின் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அசம்பாவித சம்பவங்களைத் தவிர்க்க பல இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

ஜகார்த்தாவைத் தொடர்ந்து, சுரபயாவில் கல்லூரிகள், பல்கலைகளின் மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் பல்வேறு இடங்களில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சிக்கன நடவடிக்கை தொடர்பான உத்தரவை ஜனாதிபதி திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தினர். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 200 | 300-400 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1200 | 1200-1300 | 1300 |
| தக்காளி | 150 | 120 | 150 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 200-250 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 250 | 400 |
| கரட் | 800 | 650 | 700 | 520 | 800 |
| பூசணி | 120 | 120 | 150 | 100-110 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 200-250 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 165 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 350 | 350 | 300 | 300-400 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 260 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 500-600 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 | 270 | 400 |
| பீற்றூட் | 200 | 250 | 300 | 140 | 300 |
| கறிமிளகாய் | 1000 | 700 | 600 | 600-700 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2000 | 1500 | 2400 |
| போஞ்சி | 300 | 300 | 400 | 250-300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 250 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 250-300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 220 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 500 | 400 | 500 | 400-500 | 500 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 200 | 40-100 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 120 | 65 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்வையுங்கள்

## சஜித் பிரேமதாச வலியுறுத்து



(கொழும்பு)

நாடு முழுவதும் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் மக்களினது உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அத்தோடு சட்டம், ஒழுங்கு அமைச்சர் இது குறித்து கருத்து தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் தற்போது கொலைச் சம்பவங்கள் இடம் பெறுவதால் சமூகத்தில் அனைவரும் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

பிள்ளைகள் மற்றும் ஒட்டு மொத்த சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் முறையான வேலைத்திட்டத்தை முன்வையுங்கள்.

நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் பாதுகாப்புக்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சஜித்பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# பிரதமரை சந்தித்த மாலைதீவு அமைச்சர்



(கொழும்பு)

மாலைதீவு வெளி விவகார அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கைக்கு வரும் மாலைதீவு பிரஜைகளுக்கான விசா நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மக்களுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்த, சுமூகமான பயண நடைமுறைகளை எளிதாக்குவதன் முக்கியத்துவம் தொடர்பில் இலங்கை பிரதமரும் மாலைதீவு அமைச்சரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்து பாராட்டிய மாலைதீவு அமைச்சர், திட்டங்களுக்கு ஏற்ப செயற்படும் திறன் குறித்து நம்பிக்கை தெரிவித்துள்ளார். (நி-8)

# ஹைட்ரோ மூலம் மின் உற்பத்தி

(கொழும்பு)

நாட்டில் ஹைட்ரோ தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய மகாஓயாவின் அரநாயக்க, நாவலப்பிட்டி பகுதிகளில் 2 நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டு 2.5 கிலோமீற்றர் நீளமான சுரங்கப்பாதை ஊடாக இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பகலில் சூரிய சக்தி, காற்றாலை சக்தியைப் பயன்படுத்தி நீர்த்தேக்கத்திலிருந்து நீருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு இரவு நேரத்தில் நீர்த்தேக்கத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் ஊடாக மின்சாரத்தை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக 600 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதற்கு 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் எரிசக்தி உற்பத்தியில் இது ஒரு புதிய மைல்கல் எனவும் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் 70 சதவீத மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து உற்பத்தி செய்யும் அரசாங்கத்தின் இலக்கை அடைய இது உதவும் என மின்சார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3299

### சிவா

என்ன மானங்கெட்ட மூளையோ தம்மாதுண்டு பாஸ்வர்ட ஞாபகம் வைக்க முடியல



ஆனால் அசிங்கப்பட்டது, அவமானப்பட்டது மட்டும் வருஷ கணக்குல ஞாபகம் வைச்சிருக்குது

### அபர்னா

கரெக்டா மனசுக்கு பிடித்த பாட்டு போடும் போது தான்...



நான் இறங்க வேண்டிய ஸ்டாப்பே வந்திடும்

### சத்தியா


பணத்தால் நிம்மதியை வாங்க முடியாது அண்ணா...



நிம்மதி இல்லாமல் போனதே செலவுக்கு காசு இல்லாமல் போனதால தான்டா...

### உசா

ஸ்கூல் படிக்கும் போது மிகச்சுலபமாக வரைந்த ஓவியம் எது என்று கேட்டால் அது அமீபா தான்..




அது மட்டும் தான் எப்படி தப்பா வரைஞ்சாலும் அமீபா மாதிரியே இருக்கும்

### ரஜீனன்

வீட்டுல பொண்டாட்டி பிள்ளைங்க பிரச்சினையை தாங்க முடியாமல் கொஞ்சம் ரிலாக்ஸா இருக்கலாம் என்றுதான் பேஸ்புக் வரறேன்



இங்க வந்து உள்ளூர் பிரச்சினையில் இருந்து உலக பிரச்சினை வரை கொண்டு வந்து கொட்டுகிறீங்களேடா...

### வைதேகி

ஏன்டா பல வருசமாக ப்ரோபைல் பிக்சர மாத்துறாய் இல்லை?



அந்த போட்டோல மட்டும் தான் நான் கொஞ்சம் அழகா இருக்கேன்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிறரை குற்றம் கூறும் குணத்தில் இருந்து விடுபட்டு இருந்தால், அனைவரின் ஆசீர்வாதங்களைப் பெறுவோம். - அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பாட்டு இயற்றும் புலவர்களும் குற்றம் காணும் புலவர்களும்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதியும் நிதியமைச்சருமாகிய அநுர குமார திஸாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து வாதப் பிரதிவாதங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் பங்கேற்பர். வாதப் பிரதிவாதங்களை அடுத்து, வரவு செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு இடம்பெறும். இஃது நடைமுறை.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைக்கின்ற கருத்துக்கள் பயனுறுதி மிக்கவையாக இருக்க வேண்டும்.

தவிர, நன்மை தரக்கூடிய விடயங்களையும் திருத்தியமைக்கப்பட வேண்டிய விடயங்களையும் சுட்டிக் காட்டி கருத்துக்களை முன்வைப்பதுதான் ஆரோக்கியமான செயற்பாடாக இருக்கும்.

எனினும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்வைத்த வரவு செலவுத் திட்டத்தை (2025) குறைகாணுகின்ற அளவில் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு இருப்பது மிகுந்த கவலையைத் தருகிறது.

ஆம், எமது நாடு பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தவறுவோமாயின், அதன்விளைவு சாதாரண மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதுடன் நாட்டில் பஞ்சம் பசி தலைவிரித்தாடும்.

எனவே எதிர்க்கட்சிகள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வகையில் தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமல், அரசாங்கம் முன்வைத்த வரவு செலவுத் திட்டத்தில் குற்றம் காண்பதையே தங்களின் முதற்தர நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஆம், ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த ஒருவர்; அநுர குமார திஸாநாயக்கவின் வரவு செலவுத் திட்டம் ரணில் விக்கிரமசிங்கவின் வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது எனக் கருத்துரைத்துள்ளார்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது கருத்துரையில்; தேர்தல் பிரசாரத்தின்போது தேசிய மக்கள் சக்தி கூறிய விடயங்கள் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

தவிர, போதாக்குறைக்கு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்; அநுரவின் வரவு செலவுத் திட்டத்தில் எதுவும் இல்லை என்பதாகக் கூறியுள்ளார்.

ஆக, அரசாங்கம் முன்வைத்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ள விடயங்களை ஆராயாமல் வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சிகளின் கடமை என்பது போல அவர்களின் செயற்பாடு உள்ளது.

இங்குதான் பாட்டு இயற்றிப் பெயர் பெறுகின்ற புலவர்களும் இருக்கிறார்கள். பாட்டில் குற்றம் கண்டு பெயர் வாங்கும் புலவர்களும் இருக்கிறார்கள் என்று திருவிளையாடல் படத்தில் நடிகர் நாகேஷ் கூறிய வாசகம் நினைவுக்கு வருகிறது.

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை மக்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் பொறுப்பு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

நாட்டு மக்களின் பாதுகாப்பின் பொறுப்பை அரசாங்கம் பொறுப்பேற்கிறது. தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை (22) நடைபெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாதாளக் குழுக்களின் செயற்பாடு தீவிரமடைந்துள்ளது, மனித படுகொலைகள் சாதாரணமாகிவிட்டது. பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை தெளிவுப்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார். இதற்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து நேற்று (நேற்று முன்தினம்) பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றினேன்.

நீதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை, பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நீதிமன்றங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. பாதாள குழுவின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே துப்பாக்கிச்சூட்டுக்கள் இடம்பெறுகின்றன.

அண்மைக்காலமாக துப்பாக்கிச்சூட்டுப் பிரயோகம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணையின் உள்ளடக்கத்தை பகிரங்கப்படுத்த முடியாது.

திட்டமிட்ட ஒரு தரப்பினரால் தற்போது துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. பொதுமக்களின் பாதுகாப்பை அரசாங்கம் பொறுப்பேற்கிறது. தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது என்றார். (ம-7)

# சமஷ்டி தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தை வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி வலியுறுத்து

ஒற்றையாட்சி என்ற அரசியலமைப்பை முற்றுமுழுதாக நிராகரித்து முழுமையான சமஷ்டி தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சமஷ்டி தீர்வை நோக்கி நகர்வதற்காகவே மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2015 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பைக் கொண்டுவரப்போவதாக அறிவித்திருந்த நிலையில், அதனை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

அத்துடன் கூட்டுப் பேச்சுவார்த்தை குறித்த தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக்கட்சி மறுபரிசீலனை செய்யவேண்டும்என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# மரம் முறிந்து விழுந்ததில் மயிரிழையில் தப்பிய பெண்

(வவுனியா)

வவுனியா- குருமன்காடு பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, மன்னார் வீதி, குருமன்காடு சந்திப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் முன்னால் முச்சக்கர வண்டி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் பெண்மணி ஒருவரும் இருந்துள்ளார். இதன்போது தனியார் மருத்துவமனையின் முன்பாக வீதியில் நின்ற மரம் ஒன்று திடீரென முறிந்து விழுந்துள்ளது.

மரம் முறிந்து விழுவதை அவதானித்த பெண்மணி, முச்சக்கரவண்டியில் இருந்து இறங்கி ஓடியதால் பாதிப்புக்கள் இன்றி தப்பியுள்ளார்.

முச்சக்கரவண்டி மீது மரம் விழுந்ததால் முச்சக்கரவண்டி முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

(ம-7,250)

# ஹிக்கடுவை கடலில் மூழ்கிய வெளிநாட்டுப் பிரஜை மரணம்

(ஹிக்கடுவ)

ஹிக்கடுவை கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவர் மேலும் இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகளுடன் இணைந்து ஹிக்கடுவை கடலில் நீராடிக் கொண்டிருந்த போது, மூவரும் நீரில் மூழ்கி உயிருக்குப் போராடியுள்ளனர்.

இதனை அவதானித்த ஹிக்கடுவைப் பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர், நீரில் மூழ்கிய மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளையும் காப்பாற்றி பலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த வெளிநாட்டுப் பிரஜையின் சடலம் பலப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(பொலநறுவை)

பொலநறுவை - மெதிரிகிரிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் எரிந்த நிலையில் வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மெதிரிகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மெதிரிகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிபப் பெண் தனது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த சில நாட்களாக வீட்டிலிருந்து வெளியே வராமல் இருந்துள்ளார்.

இதனால் பிரதேசவாசிகளும், வயோதிபப் பெண்ணின் மகளும் குறித்த வீட்டிற்குள் சென்று சோதனையிட்ட போது கட்டிலுக்கு அருகில் சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சடலமானது நேற்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (ம-7)

# மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று (22) சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 70.40 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.43 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று 4.23 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மன்னார் மறை மாவட்டத்தின் 4 ஆவது ஆயராகத் தெரிவு செய்யப்பட்ட பேரருட்திரு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் நேற்றையதினம் சனிக்கிழமை மன்னார் மடுத் திருப்பதியில் ஆயராக அருட் பொழிவு செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இலங்கையின் அனைத்து மறை மாவட்ட ஆயர்களும் கலந்து கொண்டனர். (படங்கள்- யோசப்நயன்)

# பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கான கலந்துரையாடல்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாலைதீவு புனித அந்தோனியார் தவக் கால திருத்தலத்தின் வருடாந்த திருவிழாவிற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருவிழாவானது மார்ச் மாதம் 19 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணை விழாவும், தொடர்ந்து 22 ஆம் திகதி சனிக்கிழமை திருவிழாவுடன் நிறைவு பெறும்.

இக்கலந்துரையாடலில் உதவிமாவட்டச் செயலாளர் ஹ.சத்தியஜீவிதா, பூநகரி உதவிப் பிரதேச செயலாளர் பா.கிரிஜா, பாதுகாப்புப் படை, கடற்படையினர், மறைக் கோட்ட குருமுதல்வர் அருட்பணி அ.பெ. ப.பெனற், பங்குத் தந்தை அருட்பணி ஹென்றி எரோணியஸ், பூநகரி பங்குத்தந்தை அருட் பணி நிலான் யூலியஸ், பிராந்திய சுகாதார பணிப்பாளர், வேரவில் வைத்திய சாலை வைத்தியர், பூநகரி பிரதேச சபை செயலாளர், கிராம சேவையாளர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி, கலாசார உத்தியோகத்தர்கள், வேரவில் மற்றும் வலைப்பாடு மீனவ சங்க உறுப்பினர்கள், ஆலய நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-8-316)

# சட்டவிரோத மீன்பிடி 17 மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 17 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி 13 முதல் 19 வரை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

இவர்கள் கொக்கடி, நந் திக்கடல், முல்லைத்தீவு, ஆன வாசல், சின்னபாடு மற்றும் கடைக்காடு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் 18 முதல் 58 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

இதனுடன் 12 மீன்பிடிப் படகுகள், ஒரு மோட்டார் சைக்கிள், 156 சட்டவிரோத மீன்பிடி வலைகள், 184 கடலட்டைகள் மற்றும் 22 சங்கு ஓடுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவு உதவி கடற்றொழில் பணிப் பாளர் அலுவலகம், புத்தளம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை உதவி அலுவலகம், மீன்பிடித்துறை அலுவலகம், மூதூர் கடற் றொழில் பரிசோதகர் மற்றும் யாழ்.கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (6-8)

# கணேமுல்ல சஞ்சீவ கொலை பயங்கரவாத சம்பவம் அல்ல

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்ஜீவ கொலை பயங்கரவாத சம்பவமில்லை சந்தேக நபர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்க முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கணேமுல்ல சஞ்ஜீவ கொலை சந்தேகநபர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படவுள்ளனர் என்ற தகவல் உண்மை என்றால்இது பயங்கரவாத தடைச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயல், இது பயங்கரவாதகுற்றமல்ல, பயங்கரவாத குற்றமல்லாதவற்றிற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தும்போது அது வழமையானதாக மாற்றப்படுகின்றது.

இது அதளபாதாளத்தை நோக்கிய வீழ்ச்சியாகும்.தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாதத் தடைச்



சட்டம் நீக்கப்படும் என தெளிவாக தெரிவித்துள்ளது.

நம்பகத்தன்மை மிக்க புனாய்வு தகவல்களின் அடிப்படையிலேயே பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படும் என ஜனாதிபதி செயலகத்தின் இயக்குநர் தெரிவித்தார் என ஒக்டோபர் 29 ஆம் திகதி தகவல்கள் வெளியாகியிருந்தன.

அரசியல் பழிவாங்கலுக்காக அதனை பயன்படுத்தமாட்டோம், எனவும் அவர் தெரிவித்திருந்தார். (நி-8)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:33 8இல்செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:HNDA,DO
எதிர்பார்ப்பு:படித்தவர்
தொ.இ: B/15151

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
கிபா-26
உயரம்:5'8"
தகைமை/தொழில்:- BSC, Law (following),driver(London)
எதிர்பார்ப்பு:தகுதியானவர், விவாகரத்தானவர்
தொ.இ: B/15152

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா:40 3/4
7 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:A/L, Teacher (PVT)
எதிர்பார்ப்பு: தகுதியானவர்
தொ.இ: B/15153

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:ரோகினி
கிபா -1 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA (following)
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: G/15154

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கிபா-18 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BIT, HND(IT)
எதிர்பார்ப்பு-வெளிநாடு, அரச உத்தி யோகம்
தொ.இ: G/15162

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:சுவாதி
உயரம்:5'2"
தகைமை/தொழில்:HNDA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15163

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உரிய நேரம் வரும்போது அரசமைப்புப் பற்றிப் பேசுவோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு கடிதம் அனுப்பியிருந்த நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7)

## கோப்பாயில்...

வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததோடு ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் (வயது-30) என்பவரே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் அண்மையில் உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது வீதியால் மிக வேகமாக வந்த வாகனம் ஒன்று மோதித்தள்ளிவிட்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்களை அங்கிருந்தவர்கள் மீட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய ஐவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தப்பிச் சென்ற வாகனத்தினைக் கண்காணிப்பு கமராக்களின் காணொளிகள் அடிப்படையில் தேடி வருகின்றனர். (ம-7,33)

## வேட்புமனு...

பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## யாழில் பண...

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மோசடியாகப் பெற்றிருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகர்ப் பகுதி மற்றும் புறநகர் பகுதிகளான திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், கொக்குவில் உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக் காலத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்திருக்கும் நபர்களின் வீடுகளை இலக்கு வைத்து குறித்த பெண் சென்றுள்ளார்.

அத்தோடு தான் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனவும், தனக்குச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது எனப் போலியான மருத்துவ அறிக்கைகளை காண்பித்து பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற பெண், தனக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ள பண உதவி தேவை எனக் கூறி 50 ஆயிரம் ரூபாய் பணத்தினை மோசடியாகப் பெற்றுச் சென்றுள்ளார்.

பணத்தினைக் கொடுத்த வெளிநாட்டவர், அது தொடர்பில் தனது உறவினர்களுக்குத் தெரிவித்தபோதே குறித்த பெண் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த வேறு நபர்களிடமும் பணத்தினை வாங்கியுள்ளமையை உறவினர்கள் கூறியுள்ளனர்.

அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயம் வெளிநாட்டில் இருந்து வந்தவருக்கு தெரியவந்ததையடுத்து பொலிஸாருக்குப் பெண்ணின் மோட்டார் சைக்கிள் இலக்கம், பெண் தொடர்பான அடையாளங்களைத் தெரிவித்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## துப்பாக்கிதாரி...

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் கொட்டாஞ்சேனையில் உள்ள ஒரு மொபைல் போன் கடைக்குள் அந்தக் கடையின் உரிமையாளர் சசிக்குமார் என்ற 38 வயது தமிழ் வர்த்தகர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச்சூடு, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களால் மேற்கொள்ளப்பட்டது. சுடப்பட்ட நபர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்தார். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட இரண்டு குற்றவாளிகளும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்லும்போது பொலிஸாரால் துரத்திச் சென்று கைது செய்யப்பட்டனர்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் துப்பாக்கி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. நேற்று முன்தினம் இரவு சந்தேக நபர்கள் மறைத்து வைத்திருந்த ஏனைய ஆயுதங்கள் குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் அளித்ததை அடுத்து, அவர்கள் ஆயுதங்களை மறைத்து வைத்த பகுதிக்குப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு, சந்தேக நபர்கள் பொலிஸ் அதிகாரிகளின் துப்பாக்கிகளைப் பறித்து அவர்களைச் சுட முயன்றனர்.

பொலிஸ் அதிகாரிகள் நடத்திய தற்காப்பு துப்பாக்கிச்சூட்டில் இரண்டு சந்தேகநபர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார். அவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-7)

## சிவ...

மதிமுகராசா மற்றும் முக்கியஸ்தரான பூபாலசிங்கம் ஆகியோர் நெடுங்கேணிப் பொலிஸாரால் அழைக்கப்பட்டு விபரங்கள் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மதிமுகராசாவிடம் கேட்ட போது இம்முறை சிவராத்திரி விரத

காலை முதல் மாலை 6 மணிவரை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

6 மணியின் பின்னர் பிறிதொரு பகுதியில் சிவனுக்கான இரவு அனுஷ்டானங்களைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிவராத்திரி தினம் வெடுக்குநாறிமலையில் சிறப்பாக இடம்பெறும் என அவர் தெரிவித்தார். (ம-7,250)

## புதிய பயங்கர...

என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த சட்டமூலத்தை தயாரிப்பதற்காக சட்டநிபுணர் ரின்சி அல்சகுலரத்ன தலைமையிலான குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

மஹஜன சம்பத — திகதி 2025.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 5755 — R 1 4 2 4 6 9
அத சம்பத — R 2 4 6 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0330

தன நிதானய — திகதி - 2025.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் - 1785 — E 17 27 47 54 E — 26539

மெகா பவர் — திகதி 22/02/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2103 — N 19 14 31 44 48

ஜய — திகதி 2025.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 023 — D 1 1 8 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3997 — சீட்டிழுப்பு திகதி 22.02.2025 — N 15 20 25 30 — N

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2025.02.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1064 — விருச்சிகம் 03 43 47 57 — 22538 — 27

உத்தியோகபூர்வ முடிவுகள் — 22.02.2025 — வெற்றி வாரம் 463 — B 1 0 2 8 4 1 — 76865 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,667,719.20

Super Ball — சீட்டிழுப்பு வாரம் 2729 — சீட்டிழுப்பு திகதி 2025.02.22 — தினம் சனிக்கிழமை — 31 59 72 78 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,899,090.40

சனிதா — திகதி 22.02.2025 — வெற்றி வாரம் 4890 — 07 26 43 78 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,405,950.00 — 57735

சசிரி — வெற்றி வாரம் 628 — 22.02.2025 — சனிக்கிழமை — 01 21 28 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4441 — சீட்டிழுப்பு திகதி 22.02.2025 — தினம் சனிக்கிழமை — 01 08 24 46 — துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.13,786,910.00 — 180860

கப்ருக — B 05 01 31 38 43 — 1905 — 22.02.2025 சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,227,505.80

அட கோடிபதி — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2555 — சீட்டிழுப்பு திகதி 2025.02.22 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,936,812.80 — 05 26 30 51 Z — 369196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுசுவை உணவுகளிற்கு

# றோயல்

Royal

சுத்தமான பசு நெய்



உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது

குறிப்பு :- யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: (சந்திரச்சந்திக்க அருகாமை)
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

(C-2316)

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Practical to UKVI on Computer

Special offer 50% Discount to all the Courses
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970

(3438)

# STUDY IN UK

CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND



# IELTS

Mrs S.Mayuri (BA Eng.Lit) அவர்களின்

Life Skills A1/A2

திருமணமாகி UK செல்பவர்களுக்கானது

## WEC COLLEGE

யாழ்ப்பாணம் - ஆரியகுளம் (புதிய உயர்கல்லூரி வளாகம்)
சாவகச்சேரி - சங்கத்தானை (இந்துக் கல்லூரி அருகே)

0779265447/ 0217200989

(867)

# உடனடி வேலை வாய்ப்பு

## நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

## V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-2316)

# மணமகன் தேவை

யாழ். இந்து, 1984 இல் பிறந்த அவுஸ்திரேலியாவில் வசிக்கும் Accountant ஆக தொழில் புரியும் மணமகளுக்கு பட்டம் பெற்ற அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மணமகன் தேவை.

076 249 5401
076 162 4584

(3442)

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1990 ஆம் ஆண்டு லக்கினத்தில் செவ்வாய், உத்திரட்டாதி, சிங்கப்பூர் Network இஞ்சினியராக வேலை பார்க்கும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளை தேடுகின்றனர்.

076 656 3049

(3440)

# முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளைக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## அடிப்படைத் தகைமைகள்

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp: 077 756 3781
jenyjude77@yahoo.com

(3455)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# கே GINSOMIN இல் அடங்கியுள்ள உட்பொருட்கள் மற்றும் அதன் பிரதான நன்மைகள் யாவை?

GINSOMIN என்பது சிவப்பு கொரியன் பனாக் ஜின்செங்கிற்கு மேலதிகமாக தயமின் அல்லது விற்றமின் B1, றிபோஃப்ளேவின் அல்லது விற்றமின் B2, நிகோடினமைடு அல்லது விற்றமின் B3, பந்தோதெனேட் அல்லது விற்றமின் B5, பைரிடொக்சின் அல்லது விற்றமின் B6, போலிக் அமிலம் அல்லது விற்றமின் B7, விற்றமின் D3, விற்றமின் V வடிவில் அல்லது பீட்டா கரோட்டின் வடிவில், வைட்டமின் C மற்றும் E, இரும்பு சத்து பெரோமேக்னடிக் வடிவில்,செப்பு, பொட்டாசியம், செலினியம், நாகம், மக்னீசியம் மற்றும் மங்கனீஸ் ஆகியவற்றை கொண்டுள்ளது.

முழுமையான B விற்றமின்களும் நாம் உண்ணும் உணவில் இருந்து சக்தியை வெளிப்படுத்த உதவுகின்றன. இது நம்மை சுறுசுறுப்பாக வைத்திருக்கிறது. B விற்றமின்கள் இதயத்தின் செயல்பாட்டிற்கு அவசியமானவையாகும். மேலும் விற்றமின் B6, B12 மற்றும் போலிக் அமிலம் ஹோமோசிஸ்டைனை குறைக்க உதவுகிறது, இது இருதய அடைப்பு மற்றும் பக்கவாதத்திற்கான ஆபத்தான காரணியாகும். B விற்றமின்கள் நரம்புகளின் ஆரோக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. B6 போன்ற B விற்றமின்கள் புரத தொகுப்பு மற்றும் நரம்பியக்கடத்தி உருவாக்கத்திற்கு முக்கியமானவை.

விற்றமின் A, C, E மற்றும் செலினியம் போன்ற உயிரகந்தடுப்பிகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் தீவிர சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன. அவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், அடிக்கடி நோய்வாய்ப்படுவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்கவும் உதவுகிறது. உயிரகந்தடுப்பிகளால் இரத்த நாளங்கள் கடினமாக மாறுவதைத் தடுக்கவும் முடியும், உயிரகந்தடுப்பிகள் இல்லையெனில் குருதியுறைதல் மற்றும் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்புகளை அதிகரிக்கும்.

நாகம் போன்ற பிற கனியுப்புக்கள் இன்சுலின் உற்பத்தி மற்றும் செயல்திறனை மேம்படுத்துகின்றன. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் நாகம் முக்கியமானதொன்றாகும். பொட்டாசியம் நரம்பு கடத்தல் மற்றும் இதய சுருக்கத்தன்மையை மேம்படுத்துகிறது. அதேபோல் மக்னீசியம், கல்சியம் மற்றும் மங்கனீஸ் ஆகியவையும் இதையே செய்கின்றன. இரும்பு ஒவ்வொரு செல்களை நோக்கியும் ஒட்சிசனை கொண்டு செல்வதற்கு முக்கியமானது மற்றும் குறிப்பாக B12 உள்ளிட்ட பிற B விற்றமின்களுடன் சேர்ந்து குருதி சோகையை சமாளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தசைகள் சரியாக செயல்பட தசைகளில் ஒட்சிசனை தக்கவைக்கவும் இரும்புச்சத்து துணை புரிகிறது.

விற்றமின் B இரத்த அழுத்தத்தைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது, இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், கல்சியம் உறிஞ்சுதலை அதிகரிக்கவும் மற்றும் எலும்புகள் மற்றும் பற்களை வலுப்படுத்தவும் முக்கிய காரணியாக அமைகிறது.

எனவே, GINSOMINஇல் உள்ள இந்த மூலப்பொருட்கள் ஒவ்வொன்றும் நமது ஆரோக்கியத்தை உச்சத்தில் பராமரிப்பதில் குறிப்பிட்ட மற்றும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

(C-076)




## நீரிழிவு நோயை வென்று ஆரோக்கியமாக வாழ்ந்திட

077 34 100 71 | 011 4 375 364

நாடளாவிய ரீதியிலுள்ள முன்னணி சுப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்...

இறக்குமதி செய்து விநியோகிப்போர் : A Baur & Company (Pvt) Limited

# தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர்கள் தேவை. கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். நகரை அண்டியவர்கள் தொடர்புகொள்ளவும்.

074 0567 791

(C-2307)

# விற்பனைக்கு

ஆனைக்கோட்டை கூழாவடி, தேவாலய வீதியில் ஒரு பரப்பு 12.53 குளி (9 அடி பாதையுடன்) அளவுடைய காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
071 043 1996

(3498)

# வாடகைக்கு

பருத்தித்துறை நகரின் மத்தியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விருந்தினர் இல்லமாக பாவிப்பதற்காக வாடகைக்கு உண்டு.

077 756 1341

(3454)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759

(838)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 223/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | |
| 1Kg கடலை | - 425/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2820/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | Max 2Kg |
| 1Kg மல்லி | - 370/= | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 985/= | ~~1050/=~~ |
| 330g டிகிரிமாறி பிஸ்கட் | - 275/= | ~~330/=~~ |
| 1 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |
| 1 ocean மீன்ரின் | - 380/= | ~~580/=~~ |

400g Anchor
1000/=

~~1050/=~~

129/=


~~165/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(876)

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பறஷெண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org